

# ஞானச்சுடர்

## ஆடி மலர் 2008




நூலகம்

வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
**துண்ணின்று உறுடற்றும் பசி**

**பொருள்:** மழை பெய்யவேண்டிய காலத்திற் பெய்யாது பொய்த்து விடுமாயின் உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் பசியால் வருந்தும். (13)

**ஏரி னுழா அர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்**

**பொருள்:** மழை என்னும் நீர்நிலையின் செழிப்புக் குறைந்தால் பயிரிடுவோர் நன்றாக உழுது பயிரிடமாட்டார். (14)



# நற்சிந்தனை

## மலர்

**மரத்திலே மலராத வாசமலர்**
**வாசவனும் வைத்து வளர்த்தமலர்**
**சிரத்திலே எப்போதுஞ் சேரும்மலர்**
**தீயமனம் வாராமல் காக்கும்மலர்**
**கரத்திலே நாமெடுத்துக் காணும்மலர்**
**கதிக்குவழி மிதுவென்னக் காட்டும்மலர்**
**வரமென்னுங் கொழுயிலே பூத்தமலர்**
**வாணாளெல்லாம் வாடாத மாமலரே**

## உன்றன் அடைக்கலமே

அறுசீராசிரிய விருத்தம்

**தித்திக்கும் அமுதே தேனே பாலே**
**தீங்கரும்பின் சுவையே**
**பத்திக்கும் அடியார்க் கருள்புரி பரனே**
**பண்ணார்மொழி பங்கா**
**அத்திக் கருளிய ஆடகத் தரசே**
**அன்பே யருளாளா**
**முத்திக்கு வித்தே மூவர் முதல்வா**
**முன்னிற்பா யடைக்கலமே.**

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 127

## 2008 ஆடி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| கலியுகத்தின் கவலை...... | நா. நவராஜ் | 1 - 3 |
| திருமுறை இசையின்..... | செல்வி ச. சரவணமுத்து | 4 - 6 |
| அடித்த அடியும் பிடித்த.... | முருகவே பரமநாதன் | 7 - 10 |
| தவமுனிவனின் தமிழ்.... | சிவ மகாலிங்கம் | 11 - 15 |
| சமய தீட்சையின்..... | சி.சி. வரதராசா | 16 - 17 |
| சைவக்கிரியைகள் | பொன். சுகந்தன் | 18 - 21 |
| ஆலயத்தில் மகோற்சவம் | செ. சுரேந்திரா | 22 - 23 |
| ஔவையார் அருளிச் செய்த... | | - 24 |
| மனிதப் பிறவியின் மாண்பு | வி. விசாலாட்சி | 25 - 28 |
| கதிர்காம முருகன்.... | வ. சிவநேசன் | 29 - 31 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய.... | | - 32 |
| நித்திய அன்னப்பணி | | 33 - 34 |
| இறப்பை எண்ணி... | திருமதி சி. யோகேஸ்வரி | 35 - 36 |
| தீராப்பிணி | வாரியார் சுவாமிகள் | 37 - 39 |
| "நா" காக்க | கு. சோமசுந்தரம் | 40 - 41 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 42 - 45 |
| தில்லை - சிதம்பரம் | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 48 |



**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல. Q.D/60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்
# ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை திரு கு. தியாகராஜ சர்மா (நீர்வை மணி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் வெளியீட்டுரையின்போது ஆச்சிரமம் ஆற்றிவரும் பணிகளில் அறப்பணி, அறிவுப்பணி, பசிப்பிணி போக்குதல் போன்ற பல்வேறு வகையான பணிகளையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றதோடு, இக்கட்டான நிலையிலும் சந்நிதியான் ஆச்சிரமம் நேர்த்தியாகவே இப்பணிகளை செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும் என்றும் கூறினார்.

மேலும் இப்பணிகளின் வரிசையில் 126ஆவது ஞானச்சுடர் மலரினை நான் வெளியிட்டு வைப்பதோடு தொடர்ந்தும் எனக்கு மலரை வெளியிட்டு வைப்பதற்கு முருகனின் ஆசி கிடைத்துவருகின்றது எனவும் பெருமிதத்துடன் கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடரின் 126ஆவது மலருக்கான மதிப்புரையை இளைப்பாறிய ஆசிரியரான திரு க. நவரத்தினம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவரது மதிப்புரையின்போது ஆலயத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் உள்ள பிணைப்பு மிகச் சிறப்பாக உள்ளதுடன் ஆச்சிரமம் அனைத்து மக்களும் சங்கமிக்கும் இடமாகவே காணப்படுகின்றது என்றும் இயம்பினார்.

மேலும் இம்மலரில் உண்மையான சைவக்கருத்துக்கள், அற்புதங்கள் என்பன அருட்செல்வமாகவே விளங்குகின்றது என்றும், மதம் மட்டுமன்றி மானிடம் பற்றிய கருத்துக்களும் செறிவாகவே உள்ளதோடு ஆரம்ப காலத்திலிருந்து விளம்பரங்கள் அற்றவகையிலும் மலருக்குரிய பெறுமதியானது இற்றைவரை மாற்றப்படாமல் தொடர்ந்தும் வெளிவருவது சந்நிதி வேலவனது அருளே என்றும் வியந்து கூறினார்.

தொடர்ந்து மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் காணப்பட்ட நிறை குறைகளையும் சுட்டிக்காட்டியதோடு இம்மலரானது சைவத்தையும் சைவ மக்களையும் மேன்மையடையச் செய்கின்றது எனக்கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.



# சுடர் தரும் தகவல்



தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் பங்காற்றியதோடுமட்டும் நின்றுவிடாது "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை நன்குணர்ந்து அதன் பிரகாரம் சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கு ஆதரவுக் கரம்நீட்டி அரவணைத்த துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு சைவ உலகமே ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளது.

அம்மையார் அவர்கள் இறைபதம் அடைந்ததைவிட அவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டுவந்த சகல அறப்பணிகளும் எங்கே தடைப்பட்டுவிடுமோ? என்ற அச்ச உணர்வே சைவ மக்கள் அனைவரிடமும் மேலோங்கி இருந்தது. அத்துடன் அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதற்கு அம்மையாரைப் போன்று தூய சிந்தனையுடன் தொடர்ச்சியாக செயலாற்றும் திறன் மிக்க ஒருவரை துர்க்கை அம்பாளின் அருள்மூலம்தான் கிடைக்க வேண்டும் என்ற அவா பொதுவாகவே எல்லோரது அபிலாஷையாகவும் இருந்தது.

இதன்படியே இதுவரை காலமும் அம்மையாரின் வழிநடத்தலின் கீழ் பண்படுத்தப்பட்டவரும் ஆலய நிர்வாக சபையின் இணைச் செயலாளரும் சமூகத்தில் உள்ள மக்களை ஓர் உயர்நத உன்னதமான நிலைக்குக் கொண்டு செல்வதற்காகப் பல கல்வி, சமூகப் பணிகளை ஆற்றிக்கொண்டிருப்பவரும், அப்பணிகள்மூலம் தன்னையும் ஆத்மீகவாதியாக இணைத்துக் கொண்டவருமாகிய திரு ஆறு. திருமுருகன் அவர்களின் கைகளிலே அன்னை அவர்கள் ஆற்றிய தலைமைத்துவத்தை, ஆலய நிர்வாக சபையினர் ஏகமனதாக ஒருமித்த கொள்கைகளுடன் ஒப்படைத்த செயற்பாடானது மிகவும் போற்றுதற்குரிய விடயமாகவே அமைந்துள்ளது.

இதற்கமைவாக சைவமக்கள் அனைவரும் நிர்வாக சபையினரின் செயற்பாடுகளைப் போற்றுவதோடு இப்பணியினை செவ்வனே செய்யப் பொறுப்பேற்ற செஞ்சொற் செல்வர் திரு ஆறு. திருமுருகனை வாழ்த்துவதோடு அவரின் அயராத பணிக்கும் செயற்பாடுகளுக்கும் நாமும் தோளோடு தோள் நின்று உதவுவோமாக.

உ

# அன்பின் அடியார்களே!

நித்த நித்தம் உங்களுள்ளத்தை - விளங்கிட
நினைந்து சுத்த மாக்கிக் கொள்ளுங்கள்
முத்தனவனைச் சிக்கெனப் பிடித்தால் - அவனும்
விருந்தா யுங்கள் நெஞ்சை யகலான்
பக்தனாக மாறிநில்லுங்கள் - சந்நிதி போய்ப்
பாலமுருகா என்று பணியுங்கள்
எத்தனையோ தூர மிருந்தாலும் - அவனை
எண்ணிவிட்டால் முன் குதிப்பானே.

மந்திரம்போ லிந்தப் பாமாலை - எண்ணியே
மனங்குளிர அவனைப் பாடுங்கள்
தந்திரமாய் ஆற்றுப்படை யோடு - அநுபூதியும்
அலங்காரம் புகழையும் பாடுங்கள்
சொந்தமாக்கி அவனைப் பணிந்தால் - நல்லவெல்லாம்
தோன்றாமல் தோற்றிக் குவிப்பான்
எந்தக்காரி யத்திலும் நினைத்தால் - சந்நிதியான்
ஏற்றமாக உங்களை வாழ வைப்பான்.

என்றுந்திரு விளையாடல் நடக்குமாம் - அதுவும்
ஏற்றவர்க்குத் தான் தெரியுமாம் - என
அன்று சொன்ன யோகர் வாசகம் - அதை
அனுபவத்தில் காணப் பாருங்கள்
இன்றெமது ஞானச் சுடரிலே - பார்த்து
ஈசன் முருகன் ஆடலை யெல்லாம்
நன்று காண்பீர் நாளும் காணலாம் - பெரிய
ஞானவான்கள் காணும் ஞானமே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலவனார்.*

உ

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு S. வில்வராசா**

(மலேசியா)

**திரு ஐ. தங்கேஸ்வரன்**

(சம்பத் வங்கி கொழும்பு)

**திரு Dr பொன். சின்னத்தம்பி**

(பொலிகண்டி வல்வெட்டித்துறை)

**தலைவர் / செயலாளர்**

(கருணையம்பதி ச.ச. நிலையம் கரணவாய் மத்தி)

**உரிமையாளர்**

(கணாதிபன் அச்சகம் கரணவாய்)

**உரிமையாளர்**

(சுந்தர்சன்ஸ் மானிப்பாய்)

**உரிமையாளர்**

(வளர்பிறை பட்டுச்சோலை சங்கானை)

**திரு வே. பாராளன்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் கல்வித் திணைக்களம்)

**திரு S. தர்மரெத்தினம் அதிபர்**

(சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி)

**திரு வ.சி. குணசீலன்**

(தாவரவியல் ஆசிரியர் கரவெட்டி)

**திரு மூ. சிவலிங்கம்**

(காரைக்கால் வீதி இணுவில்)

**திரு மா. அருட்செல்வம்**

(எழுதுவினைஞர் புலோலி வடமேற்கு)

**திரு செ. அருளானந்தம்**

(கிராம சேவகர் பருத்தித்துறை)

**திரு வி. தவத்துரைராசா**
(மூத்த விநாயகர் கோவிலடி கரணவாய்)

**செல்வி தம்பு சறோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர் நெல்லியடி)

**திரு செ. சுந்தரலிங்கம் J.P**
(நிர்வாகி சதா பொன்ஸ் கல்வி நிலையம் அல்வாய்)

**திரு ச. நவரெத்தினராசவேல்**
(ஆசிரியர் புத்தூர்)

**திரு பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக் இணுவில்)

**அதிபர்**
(யா/ சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்)

**திரு C.K. சிதம்பரநாதன்**
(கௌரி வாசம் வட்டுவத்கூத அல்வாய்)

**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி வடக்கு)

**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன் பருத்தித்துறை)

**திரு இ. பரமசாமி**
(கொல்லோலை உடுப்பிட்டி)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர் உடுப்பிட்டி ப.நோ.கூ.ச. தலைமையகம்)

**திரு கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(இளை. முகாமையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**திரு செ. அட்ஜெயலிங்கம்**
(ஆசிரியர் அல்வாய்)

**திரு நடராசா சிவயோகநாதன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கரவெட்டி)

**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா G.S**
(சிறுப்பிட்டி கிழக்கு)

உ

# கலியுகத்தின் கவலை தீர்க்கக் கல்கியாகக் கண்ணன் வருவான்

**திரு நா. நவராஜ் அவர்கள்**

கிருதயுகம், திரேதாயுகம், துவா பரயுகம், கலியுகம் என்ற நான்கு யுகங் களில் இப்பொழுது கடைக்கூறாகிய கலியுகம் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. ஐந்தாம் வேதமாகக் கொள்ளப் படும் மகாபாரதத்தில் பாண்டவர்கள் வன வாசம் செய்கின்ற வேளையில் மார்க் கண்டேய முனிவர் அவர்களை வனத்திற் சந்தித்து உரையாடுகின்றனர். அவ் வேளையில் தரும புத்திரர் "இப்பொழுது நடக்கும் துவாபரயுகத்திற்கு அடுத்து வரும் கலியுகத்தின் தன்மை எவ்வாறு இருக்கும்" என்று வினவ, மார்க்கண்டேய முனிவர் கலியுகத்தின் தன்மையை விபரிக்கின்றார். (விரிவஞ்சிக் கலியுகத் தின் தன்மைபற்றிய விடயம் தரப்பட வில்லை பாரதத்திற் கண்டுகொள்க) இறுதியாக இயமதர்மனின் வாகனமாகிய எருமை கிருதயுகத்தில் நாலு காலிலும், திரேதாயுகத்தில் மூன்று காலிலும் துவா பரயுகத்தில் இரு காலிலும் கலியுகத்தில் ஒற்றைக் காலிலும் நடக்கும் இதனால் கலியுகத்தில் மற்றைய யுகங்களிலும் பார்க்க உயிர் இழப்பு அதிகமாக இருக் கும் என்றும், அதர்மம் அதிகரிக்கத் தர்மம் நிலைகெட்டுப்போகும் என்றும் கூறி இந்நிலையிலிருந்து மக்களை விடுவிக்கப் பகவான் அவதரிப்பார் என்றும் கூறியுள்ளார். (மகாபாரதத்தின் ஒரு பகுதியாக உள்ள கீதையில் பகவான் கூறியதும் இங்கே நோக்கற் பாலது)

விஷ்ணுபுராணத்தில்- "சமூகத் தில் சொத்து மட்டுமே உயர்வு நிலை யைக் கொடுக்கும், பொருட்செல்வம் மட்டுமே நற்பண்புக்கு மூலமாகும், காமம் ஒன்றே கணவன் மனைவியை இணைக் கும் கட்டமாகும். பொய்ம்மை வாழ்வின் வெற்றிக்குக் காரணமாகும். பால் உணர்வே இன்பத்துக்கு ஒரே வழி. வெளிப் படையான அலங்காரங்களே அகச்சமயம் என்றெல்லாம் மக்கள் குழம்பும்போது திருமாலின் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரம் எடுக்கப்படும் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட ஆப்த்த வாக்கியங்களைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது கல்கி அவதாரம் நிகழ் வது தெளிவு. நாம் வாழும் கலியுகத்தின் நிகழ்வுகள் அதற்கான காலம் கனிந்து வருவதனை வெளிப்படையாகத் தெரிவிக் கின்றன. அப்படியாயின் கல்கி அவதாரம் எங்கே? எப்பொழுது நடைபெறும் என்பன பற்றிய விபரங்கள் எமக்குத் தெரிய வில்லை. அந்தக் கவலை இனி வேண் டாம். திருமாலின் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரம் எங்கே? எப்பொழுது நடைபெறும் என்பதையும் கல்கி தமது காலத்திற் சாதிக்கவிருக்கும் சாதனை கள் பற்றியும் இப்பொழுது தகவல்கள்

வெளியாகியுள்ளன.

"கல்கி வருகிறார்" எனும் ஆங்கில நூலில் சுவாமி ஜகதீசுவரானந்தா என்பவர் எழுதியிருக்கிறார். மேற்கு வங்கத்திலுள்ள ஹௌராகில்லாவைச் சேர்ந்த ஒரு பழைய கிராமமான மகர்தாஹாவில் இன்றும் இருக்கும் சுவாமி வைராவானந்த பரம ஹம்ஸா என்ற சித்தயோகி கல்கி எங்கு எப்பொழுது அவதரிப்பார் என்பதைத் தமது ஞானக் கண்ணினாற் பார்த்து அறிந்தார் என்றும், தம்மை இப்புத்தகத்தை எழுதும்படி சொல்லிக் கல்கியின் சூட்சும உருவத்தையும் காட்டினார் என்றும் சுவாமி ஜகதீசுவரானந்தா இப்புத்தகத்தில் விபரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். கல்கியின் குருமாதாவான மகாகௌரி சரஸ்வதி என்ற சந்நியாசியின் படமும் கல்கியின் படமும் இந்நூலில் உள்ளன. வசீமத் நாராயணரின் 10ஆவது அவதாரமான கல்கி இன்னும் சிறிது காலத்தில் மேமாத மளவில் வைகாசி சுக்கில துவாத சித்திதி இடபராசி ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதரித்த திருத்தலமான வட இந்தியாவின் வங்கத்தைச் சேர்ந்த மத்துரா நகரில் ஓர் அந்தணர் குடும்பத்தில் விஷ்ணுசர்மா பஸந்தி தேவி தம்பதிகளுக்கு மூன்றாவது ஆண் பிள்ளை கலிகண்டன் கல்கியாக அவதரிப்பார். ஸ்ரீ கிருஷ்ணரைப்போல் கல்கியும் சிறுவயதில் பல லீலைகளைப் புரிவார். கல்கி பிறந்த 4 ஆண்டுகளின் பின் அவரது தங்கை சுமத்திரா பிறப்பாள். 5ஆவது வயதில் இவள் ஞான தீட்சை பெற்று சந்நியாசியாக மாறிக் கல்கியின் போரில் கலந்துகொள்வாள். கல்கியின் 5ஆவது தங்கை சுவர்ணாவாக முற்பிறப்பில் கம்சனின் மனைவி அத்ரி பிறப்பாள். கல்கிக்கு 15 வயது நிறையும்போது அவரது குருமாதாவான மகாகௌரி சரஸ்வதி மந்திர தீட்சையும் ஞானதீட்சையும் அளிப்பாள். தமது 20ஆவது வயதில் கல்கி போர்க்கோலம் பூண்டு வெள்ளைக்குதிரை மீதேறி உருவிய வாளுடனும் எந்திரத் துப்பாக்கியுடனும் யுத்தத் தளபதிபோல் நாஸ்திகர்களையும், துஷ்டர்களையும், மிலேச்சர்களையும் ஒழித்துக்கட்டப் புறப்படுவார். வையகம் முழுவதும் தர்மத்தின் ஆட்சியை நிலைநாட்டுவார். தனித்தனி நாடுகளாகவும் இராச்சியங்களாகவும் பிரிந்திருக்கும் ஆந்திரா, பஞ்சாப், ஒரிசா, கர்நாடகம், தமிழ்நாடு, குஜராத், வங்கம், இமாலயம், பீகார், பாகிஸ்தான், பங்களாதேஜ், இலங்கை முதலியனவற்றையும் யுத்தமுடிவில் கல்கி ஒன்று சேர்ப்பார். ஒரு குடையின்கீழ் இந்தியாவையும் இலங்கையையும் கல்கி ஆட்சி செய்வார். கல்கியின் வருகைக்கு முன் தமிழீழம், கிழக்கு முஸ்லீம் மாநிலச் சுயாட்சியையும், சிங்களநாடு, மலைநாட்டுச் சுயாட்சி அமைப்பையும் கொண்டு இரு தனித்தனி வெவ்வேறு நாடுகளாக இலங்கையில் ஆட்சி செலுத்தப்படும்.

முற்பிறப்பில் கண்ணனின் தோழனாக இருந்தவர் வங்கத்தில் செரம்பூரில் சுதர்சன் மிந்திரா என்னும் பெயரிற் பிறந்து அணுக்குண்டுகளிலும் பார்க்க அபாயகரமான ஆயுதங்களைக் கண்டுபிடித்து கல்கிக்கு வழங்குவார். பூர்வீகத்தில் கண்ணனின் பரமவைரியாகவிருந்த கம்சன் கிழக்குப் பஞ்சாப்பிலுள்ள சண்டிகாரில் இராஜேஸ்வரனாகப் பிறந்து கல்கியின் தங்கை சுவர்ணாவை மணந்து

கல்கியின் உற்ற நண்பனாக உத்தரப் பிரதேசத்திலுள்ள மீரட்டில் வீரபத்திர சாமரராவ் என்பவராகப் பிறப்பார். அபிமன்யுவைப்போல் இவரை யாராலும் வெல்லமுடியாது. இவர் கல்கியின் தோழர்களில் ஒருவராக விளங்குவார். கல்கிக்குப் பதினேழு வயது நிறையும் போது ஒரு பஞ்சாப் தளபதி தன் கட்சியை விட்டு ஓடிவந்து கல்கியின் புனிதப் பணியிற் கலந்துகொள்வார். கிரிதராவ் என்பவர் (முற்பிறப்பில் கொடையாளி கன்னன்) மேற்கு வங்கத்தில் உள்ள பீர் பூமியில் பிறந்து மாவீரனாகிக் கல்கியின் பிரதம சேனாதிபதியாக விளங்குவார். கல்கி ஏழு பெண்களை மணந்து (இவர்களின் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளன) 100 ஆண்பிள்ளைகளையும் சியாமாங்கினி என்ற பெயருடைய ஒரு மகளையும் பெற்று ஸ்ரீ கிருஷ்ணரைப் போல 125 ஆண்டுகள் வளர வாழ்ந்து மகா சமாதியடைவார் என்றும் கல்கி வருகிறார் என்ற அப்புத்தகத்தில் சுவாமி ஜகதீசுவரானந்தா குறிப்பிடுகின்றார்.

கல்கியை அவதார புருஷனாக இந்தியாவிலுள்ள தாழ்ந்த ஜாதி (பாமர) மக்கள்தான் முதலில் அறிந்து அவரைப் பின்பற்றுவார்களாம். மேற்கு வங்கத்தில் ஹௌராவில் வேலூரிலுள்ள ஸ்ரீ ராம கிருஷ்ண தர்ம சக்கர கோவிலில் கல்கியின் மண் விக்கிரகம் 1964ஆம் ஆண்டு மேமாதம் 23ஆம் திகதி மரத்தாலான சிம்மாசனத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. ஓராண்டின்பின் இந்த மண்சிலை கங்கையிற் போடப்பட்டு கறுப்புப் பளிங்குக் கல்லாலான கல்கி சிலை 1965ஆம் ஆண்டு மேமாதம் 12ஆம் திகதி குறுசிறு கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்தியாவிலேயே கல்கிக்கு எழுப்பப் பட்ட முதற்கோயில் இதுவாகும். 1961 இல் இருந்து கல்கியின் திருவவதாரநாள் வங்கத்தில் கொண்டாடப்பட்டு வருகின்ற தோடு பூசைகளும் மற்றும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. நாமும் எமது இன்னலைத் தீர்த்தற்காகக் கல்கியாக வரவிருக்கும் காத்தற் கடவுளை வணங்குவோமாக.

## ஞானச்சுடரே!

இஷ்டா சக்தி - கிரியா சக்தி - ஞான
சக்தியுமான ஞானச் சுடரே முருகா.
இஷ்ட சித்திகள் அருளி இனிய வரங்கள்
ஈந்து எமையாளும் வள்ளிமணாளா!
அஷ்டமா சித்தியும் கைகூட வேண்டும்
அதிலுன்னருள் துலங்கிட வேண்டும்
கஷ்டங்கள் துயரங்கள் அணுகாது காக்கும் கருணை
யுருவாய் விளங்கும் கதிர்காமப் பெருமானே!

*செல்வன் ஜெ. தவேதன்.*

உலகில் அடக்கமுடியாத அசுரன் அலட்சியம்.

உ

# திருமுறை இசையின் இன்றைய நிலை

**செல்வி ச. சரவணமுத்து அவர்கள்**

தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழைப் பண்ணாகப் பருகுவது திருமுறையாகும். இசை இன்று யாவருக்கும் உரிய பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. சாதிமத வேறுபாடின்றி ஆர்வமுள்ள ஆற்றல் கொண்ட அனைவராலும் இசை இன்று கற்க முடிகின்றது. இறைவனிடத்தில் யாவரும் சமம். அவ்வாறான இடத்தில் ஆண், பெண், சிறியவர், பெரியவர் வேறுபாடின்றி இசைக்கப்படுவதுதான் திருமுறை இசை ஆகும்.

இந்திய இசைக்குக் கிடைத்துள்ள முதல் இசை வடிவமான தேவாரங்களே தாள நடையுடன் கிடைத்தன என்றால் மிகையாகாது. திருமுறைகள் இறைவனுடைய திருவருள் கிடைக்கப்பெற்ற நாயன்மார்களால் அருளப்பட்டவையே ஆகும். இவற்றைப் பண்ணொன்றப் பக்தி சிரத்தையுடன் ஓதுவதற்குரிய இடம் ஆலயம். ஆன்மாக்களின் மனத்தை ஒரு நிலைப்படுத்தவும் பல வழி செல்லும் பன்முகப்பட்டவர்களை ஒருநிலையில் சேர்ப்பனவே திருமுறைகள். இவ்வாறான திருமுறைகள் உரிய பண்களில் இசைக்கப்படும்பொழுது அதற்குரிய இரசனை, பக்தி உருவாகுவதைக் காணலாம். உதாரணமாகக் காலையில் பூபாள மோகன ராகத்தில் இசைக்கப்படுவதைக் காணலாம். அதைப்போல் மதியம், இரவு என இதனை பகற்பண், பொதுப்பண், இரவுப்பண் என வகைப்படுத்துவதைக் காணலாம். பண்களில் நவசந்திப் பண்கள் என மகோற்சவ காலங்களில் விசேஷமாக இசைக்கப்படுவதைக் காணலாம்.

பழங்காலத்தில் இவ் இசையானது ஒரு சிலரால் மட்டும் கற்கப்பட்டது. ஓதுவார்களை மட்டும் கொண்டு சோழர் காலத்துக்கோயில்களில் வளர்க்கப்பட்ட கலையே இந்த பண்ணிசை எனலாம். இன்று ஈழத்தின் அரசின் ஆணையின் வண்ணம் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம்வரை மாணவ மாணவிகளுக்கு பண்ணிசையானது பற்பல கருவி இசையுடன் கற்றுக்கொடுத்து வரப்படுகின்றது. பாடசாலைகளில் சைவ சமயப் பாடம் கற்பிக்கும் வேளை தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு பாடுவிக்கும் வழக்கம் அமைந்திருப்பதைக் காணலாம்.

அரசாங்க அங்கீகாரத்துடன் டிப்ளோமா, டிக்கிரி, முதுதத்துவமானி போன்ற பல்கலைக்கழகப் பட்டங்களை தரம் அறிந்து தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் தற்காலத்தில் இசைக்கலை வளர்ச்சி ஈழத்தில் மிகவும் பிரகாசமாக அதி உன்னதமான நிலையில் வளர்க்கப்பெற்று வருகின்றது. இவ்வாறு பட்டம்பெற்ற இசைத்துறை மாணவர்கள் ஏனைய மருத்துவத்துறை, விஞ்ஞானத்துறை, விவசாயத்துறை, வணிகத்துறை, முகாமைத்துவத்துறை மாணவர்களுக்கு இணையான பட்டதாரிகளாக மதிக்கப்பட்டுவருகின்றனர்.

மேலும் தற்காலத்தில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தினால் இசையில் திறமை வாய்ந்த மூத்த கலைஞர்களுக்கு முதுமானிப்பட்டமும், கலா பூஷணப்பட்டமும், கானசிரோன்மணிப் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றது. இவ்விருதுகளைப் பெற்றவர்களுள் கலாசூரி, அருந்ததிசிறிரங்க நாதன் கானசிரோண்மணி திரு ந.வி.மு. நவரெத்தினம், கலாபூஷணன் கானப் பொன். சுந்தரலிங்கம், பி. சந்திரசேகரம், வி. சிவஞானசேகரம் அதி உன்னத நிலையில் குறிப்பிடக்கூடியவர்களாவர்.

மற்றும் பல மாணவ மாணவிகள் பிரத்தியேகமான ஆசிரியரிடம் இசையைப் பயின்று வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஆறு வரையான பரீட்சையிற் சித்திபெற்று இசை, நடனம் சார்ந்த சகல துறைகளிலும் "கலாவித்தகர்" என்ற பட்டத்தைப் பெற்று வருகின்றனர்.

ஈழத்து ஆங்காங்கு ஊர்கள் தோறும் சபாக்கள் வைத்து அதில் இசைக்கச்சேரிகள் நிகழ்த்தி வருகின்றனர். ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் குறிப்பாக பண்ணிசை நிகழ்வு நடைபெறுவதைக் காணலாம். மக்கள் மனத்தில் இசையார்வத்தை உருவாக்குவது இதன் நோக்கமாகும். நம் நாட்டுக் கலைஞர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று நமது இசைக்கலையின் மேன்மையை அந்நாட்டு மக்களுக்கு உணர்த்தி வருகின்றனர். இதேபோன்று அயல்நாட்டு இசைக்கலைஞர்களும் நம்நாட்டுக்கு வந்து அவர்களது இசையின் பெருமையை நமக்கு எடுத்துக் காட்ட முற்பட்டுள்ளனர்.

இந்த வகையில் நம்நாட்டுக் கலைஞர்களான இசைப்புலவர் சங்கீத பூஷணம் திரு என். சண்முகரத்தினம், சியாமளா, கணேஸ்வரன், சந்திரிக்கா, சிவஞானசேகரம், திருஞானசம்பந்தன் போன்றோர் இந்திய வானொலியில் கலைஞர்களாகத் தெரிவு செய்யப்பட்டு சிறந்த இசை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பண்ணிசைக் கச்சேரி தற்காலத்தில் வானொலி, தொலைக்காட்சியில் பார்க்கும்பொழுது அதற்குப் பக்க வாத்தியங்களாக சாரங்கி, மிருதங்கம், யாழ், தபேலா, ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகளுடன் இசைக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

பண்ணிசையிலே இன்றைய நிலையின் ஏற்படும் குறைகளை ஆராய்ந்தால் பொதுவில் உண்மையான இரசனை மக்களிடத்தில் குறைந்து காணப்படுகின்றது. காரணம் பொறுமையாக இசையைக் கேட்டு அதிலுள்ள அதிநுட்பமான அம்சங்களை இரசிக்கக் கூடிய தன்மை குறைந்துவிட்டது.

கற்பனை இசையில் ஈடுபாடு குறைந்து வளர்ந்துள்ளது. இதற்கு ஏற்றாற்போல் இசை நிகழ்த்துபவர்களும் இராகம், தாளம், பல்லவி போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தாமல் விட்டு வருகின்றார்கள். திறமையுடன் பாட வேண்டிய கிருதிகளையும் அழகு நிறைந்த பாடல்களையும் பாடுவதைத் தவிர்த்து, இரசிகர்களின் சுலபமான இரசிகத் தன்மைக்கு ஏற்பத் தங்களது நிகழ்ச்சி நிரலைக் கலைஞர்கள் தயாரித்துக் கொள்கிறார்கள். சில சங்கீத சபாக்கள் இசையின் பெருமையைப்

பரப்பும் நோக்கத்தைக் கைவிட்டு வசூல் என்ற ஒன்றையே முழுநோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகின்றது.

சில சமயங்களில் சில ஆலயங்களில் கர்நாடக இசையரங்கில் தபேலாவுக்கு முதலிடம் கொடுத்து மிருதங்கத்துக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்படுகின்றது. ஆலயங்களில் தேவார, திருவாசகம், திருப்புகழ் போன்ற பக்திப் பாடல்கள் சேர்க்கப்படுவது குறைந்து வருகின்றது. சமயச் சார்புடைய இசையும் பக்தி நடனங்களும் மறைந்து வருகின்றன. முன்பு மஹோற்சவ காலத்தில் கேட்கப்பட்ட இராகங்கள், பண்கள், தாளங்கள் இசைக்கப்பட்ட கருவிகள் இன்று கேட்கப்படுவதில்லை. பூஜாங்கம், பூஜாங்கலலிதம், கமல நிறுத்தம், மண்டல நிறுத்தம், சன்னியா நிறுத்தம் போன்ற பக்தி நடனங்களை இன்று நாம் காணமுடியவில்லை. பல நூற்றாண்டுகளாக ஆலயச் சந்நிதிகளில் நடத்தப்பட்ட நாட்டிய நடனங்களும் இன்று கைவிடப்பட்டுள்ளன.

சர்வ வாத்தியத்தைக் கேட்பதும் (பல்லியம்) அரிதாகிவிட்டது. எளிய வாழ்க்கை நடத்தும் ஒருவனுக்கு ஆலயங்களில் வழங்கப்பட்டுவந்த விருது மிகவும் குறைந்துவிட்டது. இசை வளர்ச்சி அடைந்துகொண்டு போகும் வேளையில் சமூக மட்டத்தினராலும் இசை சிறிது கற்றவர்களாலும் இவ்வாறான நிலை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக இன்று பாடும் இளம் வயதினரை எடுத்துக்கொண்டால் அவர்களில் ஒரு சதவீதத்தினர் மிகப் பெருமைவாய்ந்த பண்டைய இசையான தேவார இசை திருவாசக இசை திருத்தாண்டவ இசை பிள்ளைத்தமிழ் போன்ற ஏனைய பிரபந்த இசையைப் பாடுவதற்கு மிக மிக வெட்கப் படுகின்றனர். இது உண்மையான ஒரு தெய்வீக இசை வடிவங்களை அடியோடு அழித்துவிட்டுச் செல்வதற்கு வழிதோன்றுகின்றது.

இசையைக் கற்ற எம்போன்ற மாணவர்கள் அவற்றை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் அற்றவர்களாகக் காலத்தொட்டிலில் தூங்கி வழிகின்ற நிலையும் அத்துடன் இசைகற்ற பலர் அவற்றை மறந்து வெளிநாட்டு மோகங்களில் தம்மை ஆட்படுத்திக் கொள்கின்ற நிலையும் இன்று வேகமாகப் பரவி வருகின்றது. இவற்றை வேகமாகத் தடுக்க நாமே முயலவேண்டும் என்ற நோக்குடன் அகில இலங்கைத் திருமுறை மன்றமானது தமது திருமுறை இசை நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. அதேபோன்று ஆலயங்களில் சமய நிகழ்வுகளின்போதும் திருமுறைகளை பண்ணோடு பாடும் முறையை மேற்கொண்டால் பக்தியும், சாந்தமும், கருணையும் மேலும் வளர்ந்து நல்ல மக்களாக வாழ வழிவகுத்து நல்லதைச் செய்து நமது காலத்தைப் பண்படுத்துவோமாக.

எவன் தானம் வாங்காமலும், எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், அகங்காரம் இல்லாமலும் இருக்கின்றானோ அவன் சகல தீர்த்த யாத்திரையின் பலனை அடைகின்றான்.

**நீ இழந்தது முக்கியமல்ல, எஞ்சியிருப்பதுதான் முக்கியம்.**

உ

# அடித்த அடியும் பிடித்த பிடியும்

ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள்

சண்டை சச்சரவுகளைக் கிராமியப் பாஷையில் அடிபிடியென்பர். நாட்டாண்மை மிக்கோர் உடற்பலத்தால் அடித்து அடக்குவர். அடிப்பவன் பெரியவன்- அடி படுபவன் எளியவன் என எண்ணுதல் தப்பு. அடியாத நாடு (மாடு) படியாது என்பர். ஆசிரியர்கள் அடித்துப் படிப்பித்தகாலம் மலையேறிப் போயிற்று. மனம் படியப் படிப்பு வேண்டும். படியாத வீடு விடியாது. அடிவாங்குவதும் கொடுப்பதும்கூட இறை சம்பந்தமான நிகழ்வுகளாய் அமைந்துள்ளன. எங்கும், எதிலும், எப்போதும் அங்கிங்கெனாதபடி நிறைந்தவன் அவன். அவன் இன்றி ஓரணுவும் அசையாது. இந்த அடியால் தளும்பின்றி மற்றவர்களையும் அனுபவிக்க வைத்தான் சிவன் மட்டுமன்றிக் கண்ணனுந்தான். யசோதை கண்ணபரமாத்மாவை உரலோடு பிணித்து அடித்தபோது எல்லா ஜீவஜந்துக்கள் மேலும் பட்டதாகக் கதை. இதே படிப்பினை சிவனுக்கும் ஏற்பட்டது. அரசன் அரிமர்த்தன பாண்டியனின் பிரம்படி பிட்டுக்கு மண் சுமந்த சுந்தரேசன் மேனியிற் பட்டபோது மன்னன்மீதும் அவன் தேவி மீதும், குடிமக்கள்மீதும் பட்டதாகக் கதை.

நரியைப் பரியாக்கிக் கொடுத்தான் சிவன். அவை இரவோடு இரவாய் நரியாகி ஊளையிட்டன. இத் திருவிளையாடலை மணிமொழியாரே தமிழ்ப் பாவாக வடித்தார்.

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவினாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே

திருவாசகம் ஆனந்தமாலை 7

குதிரை- பரி ஒத்த பொருளுடையன. இங்கே விரைவாய் ஓடும் குதிரையெனவும், சிறந்த குதிரை, அழகான குதிரையெனவும் பொருள் விரிப்பர். தென்னன்- பாண்டியன், பாண்டி- பாண்டிநாட்டு, வெள்ளம் கருணைக்கடல்.

இந்த அற்புதமான அருளாட்சி வாகீசர் வாக்கிலும் வடிக்கப்பட்டுள்ளது.

நரியைக் குதிரை செய்வானும் நரதரைத் தேவு செய்வானும்
விரதங் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்

முரசதிர்ந், தானைமுன் னோடமுன் பணிந்த தபர்களேத்த
அரவரைச் சாத்திநன்றானு மாரூ ரமர்ந்தவம் மானே

திருமுறை 4:4.2

**விச்சின்றி- விதையில்லாமல் (மணிவாசகர்- விச்சதின்றியே விளைவு** செய்குவாய் திருச்சதகம் 96) நாறு- நாற்று- நாறு என்ற பிரயோகம் யோகர் நற்சிந்தனையில் வரக்காணலாம்.

"நரிகளெல்லாம் பெருங்குதிரையாக்கிய வாறென்னே நின்பேரருளே" எனப்பாடியவர் பெருந்துறைப் பிள்ளை இந்த நிலையால் வாதவூர் சிறையிடப்பட்டார். அத்தண்டனை அவரை வாட்டியது. எனவே

தொல்லையோர் இருவர்தேடும்
சோதியே யாது செய்வேன்
தில்லையோர் பரவ நின்ற
தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை என்பால்
அன்றெனை அடிமை கொண்டாய்
அல்லையோ தமியேன் இன்னல்
அறிதியோ அறிந்திலாயோ

எனப் பாடினார். சோமசுந்தரேசன் அந்நிலைகண்டு ஒரு திருவிளையாடல் செய்தான். வைகை நதிபெருக்கெடுத்தோடியது. எல்லோரும் அளந்துவிட்ட பாகத்தை அடைக்க வேண்டுமென அரசகட்டளை. பாவம் அந்த மலடிக்கு (வந்திக்கு) உதவ ஆட்கள் இல்லை. வேறு வழிதெரியாது ஈசுவரனை நொந்து அழுதாள் தொழுதாள்.

நெட்டரவக் கச்சுடையாய்
நீலநிறத்திரு மாதின்
வட்டமுலைத் தழும்புபட
வந்தணையுந் திருமார்பா
கட்டிய செஞ்சடையாயுன்
கண்ணருள் கொண்டெப் போதும்
பிட்டினை விற்றுண் பேற்கும்
பேரிடும்பை உளதாமோ?

அப்பா சுந்தரேசா. மீனாட்சியைப் பங்கில் உடையவனே. சர்ப்பாபரணனே! உன்னையே முன்னிப் பிட்டவிற்றுச் சீவனஞ் செய்யும் எனக்கு இத்துயரம் வரலாமோ என வழிபடு தெய்வத்தை இரந்தாள். இறைவனே கூலியாளாய் வந்து பிட்டைக் கூலி யாகக் கொண்டு அணைகட்டப் புறப்பட்டார். அவரங்கேயும் ஆடினார் பாடினார். மன்னன் வந்தான் அது யாருடைய பங்கு என வினாவினான். சேவகன் அந்தக் கூலியாளைக் காட்டினான். சுளீர் சுளீரென முதுகிற் பிரம்படி பட்டது. எல்லோர் மேலும் பட்டது. அந்த நிகழ்வு வாதபுரீசுவரரின் உள்ளத்தைச் சீண்ட அது கவிதை வடிவம் பெற்றது.

பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்திவியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

திருவம்மானை 8.

வியன் மண்டலத்து- பரந்த உலகத்து, கலிமதுரை- ஆரவாரம் மிக்க மதுரை, மொத்துண்டு- அடியுண்டு, கோ- அரசன், பாண்டிய மன்னன்.

பாடல்கள் வாயிலாகப் பரமனின் பெருமை நமக்கு முதலில் சிறிது விளங்குகிறது. காண்பதெல்லாம் அவனே என்கின்ற அறிவு அதைத் தொடர்ந்து வருகிறது. திருப்பெருந்துறை போன்ற க்ஷேத்திரங்களில் அவனுடைய சாந்நித்தியத்தைக் காண்கிற பக்குவம் பின்னால் வருகிறது. அவன் விண்ணுலகமுற்றும் விளங்குகிற புகழுடையவன், நெற்றிக் கண்ணுடையவன், கடந்த முதல்வன், ஆரவாரம் மிக்க மதுரையில் மண்சுமந்து கூலிபெற்றவன். மன்னனின் பிரம்பால் அடிபட்டு முதுகு புண்பட்டவன் அவனது மேனியைப் பாடி ஆடுவோம்.

உரை சாது ஸ்ரீநிவாசன்

சிவபெருமான் மண்சுமந்து புண்ணும் சுமந்தான்- இந்த நிலையைக் கடவுள் மாமுனிவர் ஓரற்புதமான கவிதையாக வடித்துத் தந்துள்ளார்.

நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
ஆறுபடுஞ் சடைமுடியானே அடியவர்கட் கெளியானே
மாறுபடும் புரமெரித்தாய் மாறுபடும் போதுடலில்
கூறுபடும் சிவஞானக் கொம்பினுளங் குழையாதோ

அருமையான படைப்பு- வார்ப்பு, நீறு- திருநீறு, நின்மலன்- மலமற்றவன் மாறுபடும் புரம்- முப்புரம், மாறு- பிரம்பு, கூறு- பங்கு, குழைதல்- உருகுதல், வருந்தல்.

திருநீறணிந்த, பொன்போன்ற அழகிய திருமேனியை உடையவனே, நிர்மலமானவனே, நெடியகங்கையைச் சடாமுடியில் அணிந்தவனே உனது பக்தர்க்கு எளிவந்து அருள் பாலிப்பவனே. மாறுபட்ட முப்புரங்களை எரி செய்தவனே, நின் திருமேனியிற் பிரம்படிபட்டவேளை சரிபாதியாய் அமைந்த நின்தேவியின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்ற வியப்பும் வினாவும் பளிச்சிடுகின்றது. இப்பாடல் இறைவன் இறைவியின் பாதி பாதி பொருந்திய திருவடிவத்தை அப்பர் சுவாமிகள் அருளொழுக, அழகொழுகப் பாடி இருக்கிறார்.

புதுவிரி பொன்செ யோலை யொருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத
ஒருபாடு மெல்ல நகுமால்

மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்
குழல் பாக மாகவருவர்
இது இவர் வண்ணவண்ண மிவள் வண்ண வண்ணம்
எழில் வண்ண வண்ண மியல்பே

திருமுறை 4:8:.10

ஓலை- தோடு, சுரிசங்கம்- குண்டலம்

சிவன்மேற்பட்ட அடி தேவியைத் தொட்டு மணிவாசகரையும் தொட்டு இன்று படிப்போரையும் தொடும்பாவமே சொரிதயம் (சமஉள்ளம்) ஆகும். இவ்வண்ணம் இறையனுபவம் பெற்ற மணிவாசகப் பெருமான் தனக்காக அடிபட்ட இறைவனைச் சிக்கெனப்பிடித்து ஒரு பதிகம் பாடியுள்ளார். நாமும் சிக்கெனப் பிடிப்போமாக.

விடைவிடாது உகந்த விண்ணவர்கோவே
வினையனேன் உடைய மெய்ப்பொருளே
முடைவிடாது அடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக்குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத் தெனையாண்ட
கடவுளே கருணை மாகடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவது இனியே

பிடித்தபத்து 2

குருவே துணை

# முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 23ஆவது குருபூசைத்தினம் (07.08.2008)



மேற்படி சுவாமி அவர்களின் குருபூசைத்தினம் 07.08.2008 வியாழக் கிழமை வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிர மத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.

தூய மனதுக்கு இறைவன் புலப்படுகிறான்.

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் கட்டுரைத்தொடர்-19

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

சிவாகமங்களின் சாரமாகத் திருமந்திரம் காணப்பட்ட பொழுதும் இது ஞானம், யோகம் என்ற இரண்டினையும் சிறப்பாக வைத்துக்கொண்டு சரியை கிரியை முதலானவற்றைக் குறிப்பாக எடுத்துப் பேசுகிறது. சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கின் உட் பிரிவுகளில் ஞானத்தில் ஞானம் என் பதைப் பரம இலட்சியமாகக் கொண்டு விளங்கும் நூலாகவே திருமந்திரம் காணப்படுகின்றது. சிவாகமங்களின் ஞானபாதப் பொருளை விளக்குவதற் காக அவதரித்த ஞானச்செல்வராகவே திருமூலர் திகழ்கிறார். திருமந்திரம் ஞானத்தின் ஞானபாதப் பொருளைச் சிறப்பாக எடுத்து விளக்குகிறது.

பராசக்தியைப் பல வடிவங்களில் பல வழிபாட்டு நிலைகளிலே தரிசனம் கண்டு ஊனும் உள்ளமும் உருகிப் பாடுகின்றார் திருமூலர். பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. அவளுடைய துணையின்றி எந்தத் தவமும் ஆகாது. பராசக்தியின் ஆற்றலைக்கொண்டு தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் நடைபெறு கின்றன. பஞ்சமூர்த்திகள் என்று சாஸ் திரங்களிலே சொல்லப்படுகின்ற ஐந்து கடவுளர்களும் தேவியின் ஆற்றலி னாலேயே இயங்குகிறார்கள். பராசக்தி யின் துணையில்லாமல் முத்தியைப் பெறமுடியாது.

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர் புகும் அறு அறியேனே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏலவே உணர்விக்கும் என்னம்மையாகிய வாணி சரஸ்வதியின் வடிவத்தைத் திருமூலர் தனது பாடலிலே விளக்குகிறார். உள்ளங்கையிலே அறிவுச் செல்வமாகிய ஏடு (புஸ்தகம்) தாங்கிய நங்கை கலைமகள் வெண்ணிற ஆடை அணிந்து வெள்ளைத் தாமரைப் பூவிலே வீற்றிருக்கின்றாள். ஒரு கையில் வெண் டாமரை மலரை விரும்பி ஏந்தியும் இருக் கிறாள். படைப்புக் கடவுளாகிய பிரமனின் தேவி சரஸ்வதி எப்பொழுதும் திருமுறை யாகிய வேதங்களைப் பாடிக்கொண்டு இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங் களை என்னுடைய தலை சூடிக்கொள் ளும் எனது வாய் தோத்திரங்களையே சொல்லும்.

ஏடங்கை நங்கை, இறை எங்கள் முக்கண்ணி,
வேடம் படிகம், விரும்பு, வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பணி பாதங்கள்
சூடும் என் சென்னி, வாய் தோத்திரம் சொல்லுமே.

**இறைவனை அடைய உண்மையான ஆன்மீக தாகம் இருந்தால் போதும்.**

கலைமகள் என்றும், மலைமகள் என்றும் இன்றும் பல உருவங்களிலும் காணுகின்ற தேவியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே ஞானத்தவ முனிவர் பாடியுள்ளார்.

காஜ்மீரிலும் நேபாளத்திலும் ஒரு சிலர் வயிரவ மந்திரத்தை வைத்து உபாசிக்கிறவர்கள் இருக்கிறார்கள். தவறான முறையில் ஒரு நாட்டைச் சூரையாடும் காலம் வந்தால் அந்தக் காலத்திலே வயிரவ உபாசனை செய்ய வேண்டும். அதை எப்படி எப்படி உபாசிக்க வேண்டும் என்று வயிரவ மந்திரத்திலே கூறப்பட்டுள்ளது. வயிரவமூர்த்தி பயத்தைப் போக்குகிறவர். மரணம், பிறப்பு என்ற பயத்தைப் போக்குபவர். வயிரவர் என்ற பெயரே அச்சத்தைப் போக்குபவர் என்பதைத் தெரிவிக்கும். சிவனுடைய இருபத்தைந்து மூர்த்தங்களிலே துஷ்ட நிக்ரஹ வடிவமாக வைரவ மூர்த்தம் கூறப்பட்டுள்ளது.

மிருகேந்திரனைக் கண்டு மற்ற மிருகங்கள் அஞ்சி ஓடுவதுபோல வயிரவ மூர்த்தி அஞ்சுகிறவர்களுக்கு அவர்களுடைய அச்சத்துக்கு விஷயமாயிருக்கும் அச்சத்தையும், பகை முதலான அச்சத்தையும், வேற்று அசுரரால் ஏற்படுகிற கொடுமை ஆகிய அச்சத்தையும் போக்குவார்.

வயிரவக் கடவுளின் சக்தியை நினைவு கூர்வது வயிரவ மந்திரம் ஆகும். இதில் ஐம்பது பாடல்கள் உள்ளன. பராசக்தியை வணங்குபவர்கள் மந்திரத்தை உச்சரிக்க வேண்டியமுறை, கிரியைகள் செய்யப்படும் முறை ஆகியவற்றினை இப்பகுதி விளக்குகிறது. வயிரவியாகிய துர்க்கை சிவனுக்கு அங்கமாவாள். சூலத்தையும் கபாலமான மண்டை ஓட்டையும் கையில் தாங்கி உள்ளாள். நான்கு கரங்களையுடைய துர்க்கை, மற்றைய இரண்டு கரங்களிலும் நாகபாசத்தையும் அங்குசத்தையும் தாங்கி விளங்குகின்றாள். பிரம விஷ்ணுக்களால் அடிமுடி தேடியும் காணமுடியாத சிவனுக்கு மேலான அங்கமாய் நின்ற சிறப்பினை உடையவள் சூலினி துர்க்கை ஆவாள்.

சூலம், கபாலம் கை ஏந்திய சூலிக்கு
நாலாம் கரம்உள நாகபாச அங்குசம்
மால், அயன் அறியாத வடிவுக்கு
மேல் அங்கமாய் நின்ற மெல்லியவள்.

பிறவிநோய் நீங்குவதற்கு அம்பிகையின் பாதங்களைப் பணிதல் வேண்டும். உலகியற் பற்றுக்கள் நீங்குவதற்கு, ஆசைச் சங்கிலி அறுவதற்கு துறவியர்களுக்கு அருளும் தலைவியாகிய தையல் நாயகியின் பாதங்களைப் பற்றிப் பிடிக்க வேண்டும். பிரபஞ்ச மயக்கத்தைத் தனது அருட்பார்வையால் அகற்றும் மனோன்மணியைப் பக்தி சிரத்தையோடு தோத்திரம் செய்து பணிந்து வணங்கினால் கொடிய பிறவித்துன்பம் நீங்கிவிடும்.

தையல் நல்லாளை, தவத்தின் தலைவியை,
மையலைப் போக்கும் மனோன்மணி மங்கையைப்
பைய நின்று ஏத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவம் இனி மேவகிலாவே.

*கடவுள், உலக ஆசைகள் கொண்ட மனதிற்குப் புலப்படாதவர்.*

பூரண சக்தியை அனுபவத்தினால்தான் அறியமுடியும். உடலிலே பூரண சக்தி இல்லாமலும் ஞானத்திலே பூரண சக்தி இல்லாமலும், பூரண சக்தியைப் பற்றி அறிந்துகொள்ள முடியாது. இறையருள் பெற்ற ஞானிகளின் அனுக்கிரகம் இருக்குமானால் பூரணசக்தி தானாகவே கிடைத்துவிடும். பூரண சக்தியை அறிபவர் யார்? அறிந்தவர் நிலையாது? அறிந்தவர் எப்படி அடங்கி இருத்தல் வேண்டும் என்பதை முப்பது பாடல்களிலே திருமூலர் விளக்குகிறார்.

சக்தி வழிபாடு சக்தியுபாசனை மார்க்கம், தாட்சண்ய மார்க்கம் என்று இருவகைப்படும். சிவமும் சக்தியும் அபின்னமாக இருப்பதாக உபதேசிப்பது தாட்சண்ய மார்க்கம் (சாக்தேயம்) எனப்படும். சைவ சித்தாந்தமும் இந்த நிலையையே ஏற்றுக்கொள்கிறது. நான்காம் தந்திரம் முழுவதும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துப்பேசுகிறது. ஆதார, ஆதேயத்தினை அலங்கரிப்பவளாகிய பராசக்தியின் தியானம் உபாசனை பற்றி நான்காம் தந்திரம் குறிப்பிடுகிறது. சக்தி உபாசனை என்ற பெயரில் சிலர் மது மாமிசம் நிறைய அருந்துகிறார்கள். திருமூலர் இத்தகைய வழிபாட்டினைத் தயவு தாட்சண்யம் இன்றிக் கண்டிக்கிறார். சக்தியின் அருளை வேண்டிக் கள்ளைக் குடிக்கும் இவர்கள் தங்களிடம் உள்ள சக்தியையும் இழக்கிறார்கள் என்பதைச்

சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சக்தி அழிந்தது தம்மை மறத்தலால்

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. நிலைத்த, அழியாத, மாறாத பேரானந்தப் பெருவாழ்விலே நிலைத்து நிற்கச் செய்வதுதான் உண்மையான சக்தி வழிபாடு. சிவயோகத்திற்குச் சாதகமான கருத்துக்கள் நூல் முழுவதும் வியாபித்திருக்கின்றன.

உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையிலே தொடர்பு உண்டு. உடலிலே இருக்கின்ற வன்மை அதுவும் உணவினால் உண்டான வன்மை உள்ளத்தையும் அடியோடு கெடுத்துவிடும். சாத்வீக உணவுகளை உட்கொண்டால் சாத்வீக குணங்கள் மேலோங்கும். மாமிச உணவுகளை உட்கொள்வதோடு மது பானம் முதலியவற்றை அருந்துவதால் இராட்சத குணங்கள் தலையெடுக்கும். தூய்மை இல்லாத உணவினால் உண்டான வன்மை மனத்தைப் பாழ்படுத்திவிடும்.

பரசிவம் முதல் ஸ்ரீகண்ட ருத்திரர் வரை அவர்களின் செயற்பாடுகள் அத்தனைக்கும், விருப்பங்கள் அத்தனைக்கும், அறிவுரைகள் அத்தனைக்கும் மூலகாரணமாக இருக்கின்ற பராசக்தியே பூரணசக்தி எனக் கூறப்படுகிறது.

ஆண்டவனுக்கு உள்ள போதம் ஆனந்த போதம். நமக்குள்ள அறிவு சுகதுக்க ரூபமான அறிவு. சுகரூபமாக இருக்கும்போது இந்திரிய சுகம் மூலமாக நாம் எக்களிக்கின்றோம். ஆனால், அது நீண்ட காலம் நிலைப்பதில்லை. காது கேட்கும் சக்தியை இழந்தால், கண் ஒளியிழந்தால் அதுவே துக்க ரூபமாக மாறுகிறது. ஆண்டவனைப்பற்றிய அனுபவம் ஆனந்த சொரூபம். அந்த ஆனந்த அனுபவம்தான் பூரண ஆனந்தம். பூரண

மாகிய பரசிவத்திலிருந்து பராசக்தி யாகிய பூரணம் பிரிந்தது. பூரணமானது பூரணத்திலிருந்து வெளிப்படுகிறது. கடலில் இருந்து ஒரு கலசத்தில் நீர் எடுத்துவிட்டால் கடல் நீர் குறையாது. இதேபோலவே காலதேச வரையறைகள் இல்லாத பரம்பொருளில் இருந்து எது எடுத்தாலும் அது எப்போதும் நிறைந்த பொருளாகவே இருக்கும். பரசிவத்தின் திருவுள்ள அசைவுதான் பூரணசக்தி என்பதை

"சக்தி தன் வடிவேது என்னில்
தடையிலா ஞானமாகும்"

எனச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகிறது.

சிவயோகிகள் நமக்கெல்லாம் உணர்த்தவேண்டிய அனுபவத்தைச் சிவானுபவமாகவே எடுத்துக் காட்டுவார் கள். திருமூலர் "அளந்தேன் அகல் இடத்து அந்தமும் ஈறும்" எனத் திருமந் திரத்தில் குறிப்பிடுகின்றார்.

இவ் உலகத்திலே உள்ள சகல பொருட்களிலும் ஆண் பெண் வேறுபாடு உண்டு. எவன் ஒருவன் தத்துவங்களை உணர்ந்தானோ எவன் ஒருவன் அவை களைக் கொடுத்து உதவிய பரம் பொரு ளாகிய இறைவனை உணர்ந்தானோ எவன் ஒருவன் உலகம் ஆணும் பெண் ணும் படைக்கப்படுவதற்குக் காரணம், இறைவன் அம்மையும் அப்பனுமாக இருக்கும் நிலையே என்பதை உணர்ந் தானோ அவன்தான் பூரண சக்தியை அறியும் ஆற்றல் உடையவன் என் பதைப் பின்வரும் திருமந்திரம் எடுத்து விளக்குகிறது.

அளந்தேன் அகலிடத்து அந்தமும் ஈறும்
அளந்தேன் அகலிடத்து ஆதிப் பிரானை
அளந்தேன் அகலிடத்து ஆணும் பெண்ணும்
அளந்தேன் அவனருள் ஆய்ந்து உணர்ந்தேனே.

பசு புண்ணியம் பதி புண்ணியத் திற்கு ஒருவாயில். பதிபுண்ணியம் கிடைத்துவிட்டால் பசு புண்ணியம் காரியப் படாது. பதி புண்ணியம் பல பிறவிகளில் ஈட்டி வைத்த பெருமக்கள் புண்ணியராவர். அத்தகைய புண்ணியர்களைப் பராசக்தி தனது அருள் வடிவமாக மாற்றுகின்றாள். இப்படித் தோற்றுவித்ததை முறையே ஒடுக்கிக்கொண்டு தானும் சிவத்திலே ஒடுங்குவாள்.

ஒரு பாதி பூரணம் ஆகாது. இரண்டு கை சேர்ந்தால்தான் பூரண நமஸ் காரம். ஒரு கையைத் தூக்குவது பூரண நமஸ்காரமாகவோ சைவ அறிகுறி யாகவோ காணப்படமாட்டாது. எல்லாவற் றிலும் தாழ்வு இருக்க வேண்டும். எங்கே முனைப்பும் தடிப்பும் இருக்கிறதோ, எங்கே தணிவு இல்லையோ எங்கே பணிவு இல்லையோ அங்கே சைவம் இல்லை. மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை யோகிகள் மூலாதாரம், சுவா திட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்ற கேந்திரங்களைத் தாண் டிப் புருவ நடுவாகிய ஆஞ்ஞைக்குக் கொண்டு செல்வர். குண்டலினி சக்தியை யோக சக்தியாக மாற்றி உச்சியில் அமிர்தத் தைச் சுவைப்பார்கள். பிரபஞ்ச வாழ்வில் அமுழ்ந்துகிறவர்கள் அதனைப்

**அகங்காரம் இருக்கும்வரை முத்தி கிடைக்க வழியில்லை.**

போக சக்தியாக மாற்றி உலகியல் இன்பங் களைத் துய்ப்பார்கள்.

சீவன்களுக்கு இன்பத்தைத் தரும் குண்டலினி கீழ் முகமாய் இருந்து காமச் செயலில் விருப்பத்தை ஏற்படுத் தும் போக சக்தியாகத் திகழும். சிவக் காதல் கொண்டவர்களுக்குக் குண்ட லினி யோக சக்தியாக மாறிப் பேரின்பத் தினை நல்கும். மதங்கொண்ட யானைக ளாகிய ஐம்புலன்களும் அவற்றைச் செலுத்தும் மனமும் சிவயோகத்தில் திளைக்கும் பராசக்தி, பரசிவம், ஆன்மா ஆகிய மூன்றும் இணைந்திருக்கும்போது தான் அந்தப் பேரின்ப நிலை ஏற்படு கிறது. அநுபூதிமானாகிய ஆன்மா அனு பவப் பொருளாகிய சிவசக்தியிற் சேர்ந் திருக்கின்ற அனுபவந்தான் பரிபூரண சக்தியை அனுபவிக்கக்கூடிய உபாயம் ஆகும்.

கும்பக் களிறு ஐந்தும் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பின் கலவியுளாய் ஒழிந்தாரே.

எங்கும் வியாபித்திருக்கின்ற பரிபூரண சக்தியாகிய பராசக்தி, ஞான சொரூபியாகிய பராசக்தி, திருவருளாகிய பராசக்தி, அந்தப் பராசக்தியை அடைவதுதான் பரம லட்சியம் என்பதைப் பூரண சக்தியுள் அமைந்திருக்கும் முப்பது பாடல்களும் தெளிவாக விளக்குகின்றன.

(தொடரும்...

## கர்மத்தைப் போக்க தர்மம் செய்வோம்

கர்மத்தைப் போக்க தர்மம் ஒன்றே உகந்த வழி. ஆதலால் இயன்றளவு முடியுமானவரை மனிதன் தர்மம் செய்து வாழப்பழகிக்கொள்ளவேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு அதனை பாவமன்னிப்புமூலம் போக்க முடியுமா?

நாம் செய்த வினைகளை நாமே அனுபவித்ததாக வேண்டும். இதேதான் இந்து சமயம் உறுதியாகக் கூறுகின்றது. வினை விதைத்தவன் வினைதான் அறுக்க முடியும். தினை அறுக்க முடியாது. இவைகளில் இருந்து விடுபட நன்மையான காரியங்களை நாடுங்கள். தான தர்மங்கள் செய்வதில் தாமதியாதீர்கள். தர்மம் தக்க சமயத்தில் வந்து தலை காக்கும். தர்ம காரியங்களை இன்றே அதை நன்றே செய்வோம்.

## உலகம் உபதேசிக்கிறது

இறந்தபின் வரப்போகும் புகழுக்கு ஆசைப்பட்டு அலையாதே. நீ இறந்தபின் உன்னைப்பற்றி யார் என்ன சொன்னாலும் உனக்கு என்ன? உன் காதுக்கு அது எட்டாது.

உ

# சமய தீட்சையின் முக்கியத்துவம்

திரு சி.சி. வரதராசா அவர்கள்

அழித்தல், அளித்தல் என்ற இரு சொற்களிலிருந்து உருவாவது தீட்சை என்ற சொல்லாகும். இதற்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பதே கருத்து. வினைகளை- மலங்களை அறுத்து உயிர்களைத் தளையிலிருந்து விடுவிப்பது தீட்சை, ஐம்புலன்களே கர்மங்களுக்குக் காரணமாக இருப்பவை, "மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். மனிதனை ஏமாற்றி அவன் துன்பம் அடையுமாறு செய்கின்ற புலன்களிலிருந்தும் அவற்றினால் விளையும் கர்மங்களிலிருந்தும் உயிர்கள் விடுதலை பெற வகை செய்வது தீட்சை. இறைவனே குருவடிவில் உயிர்களைத் தளையிலிருந்து விடுவிக்கிறான். இந்த விடுதலையே தீட்சையின் உண்மையான நோக்கம்.

சமய தீட்சை உண்மையில் சைவ சமயிகளை ஆசாரமுள்ள புனித மனிதர்களாக்கும். சமய தீட்சையானது ஒருவர் சைவசமயத்திற் புகுதற்காகச் செய்யப்படுவது. ஆதலால் சமயதீட்சை பெறாதவன் சைவ சமயத்தவன் ஆகான். அவன் விவாகம், அந்தியேட்டி, சிரார்த்தம் முதலிய சைவக் கிரியைகளைச் செய்வதற்குத் தகுதியில்லாதவன். சைவ சமயப் பிள்ளைகளுக்கு ஏழு வயதுக்கு முன்னர் பிரவேச தீட்சை என்னும் முதல் தீட்சையை வழங்கி வாழ்வைப் பக்குவ நிலைக்கு ஆட்படுத்துவது சைவ சமயத்தவரின் உண்மையான பாரம்பரியமாகும். மக்களின் முன்வினைகள் அறுபட வழி செய்யவல்லது சமய தீட்சை. படித்தவர், பாமரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஆண்,பெண், இல்லறத்தோர், துறவறத்தோர், சிறியோர், முதியோர் என்ற பேதங்கள் எவையும் இல்லாமல் எல்லோரும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் தீட்சையின் பயன் யாது என்பதைத் தெளிவாக அறிவது அவசியம்.

சைவ சமயத்தவர்களை மெய்ஞ் ஞான வழிப்படுத்தலுக்கான தீட்சைகள் ஏழு வகைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

குரு தனது அருட்பார்வையினாலேயே தீட்சையளிப்பது நயனதீட்சை எனப்படும். இது முதலாவது வகை. குரு தனது திருக்கரத்தால் மாணவனின் கைகளைப்பற்றி அவனது தளையை நீக்குவது இரண்டாவது வகையான ஸ்பரிச தீட்சை எனப்படும்.

குரு புனிதமான மந்திரங்களைக் கூறி மாணவனின் தளையை அகற்றுவது மூன்றாவது வகையான வாசக தீட்சை எனப்படும். குருவின் தவவலிமையால் அவரது சிந்தனை மாணவனின் உள்ளத்தில் தோய்ந்து மாணவனது சிந்தனையில் கலந்து நிற்குமாறு செய்தலே நான்காவது வகையான மானச தீட்சை ஆகும்.

குருவானவர் ஆகமங்கள் முதலிய சாத்திர, தோத்திர, புராண நூல்களை மாணவனுக்குக் கற்பித்து அவனைப் பிறவித் தளையிலிருந்து விடு

விப்பது ஐந்தாவது வகையான சாத்திர தீட்சை ஆகும். யோகப் பயிற்சிகள்மூலம் குரு மாணவர்களுக்கு உடல், உள, அறிவு, வலிமையை ஏற்படுத்துதல், ஆறாவது வகையான யோகதீட்சை எனப்படும். ஹோமம் வளர்ந்து புனித அக்கினியின் முன் குரு மாணவனுக்கு தீட்சையளிப்பது ஹோளத்திரி தீட்சை என்ற ஏழாவது வகையாகும்.

நியமம் தவறாது வாழ்பவர்கள் மேலும் தம் நிலையை உயர்த்துதற்குச் சைவ சமயத்தீட்சைகளைப் பெறுவது அத்தியாவசியமாகும். தீட்சை பெற்றவர்கள்பால் சீரான ஒழுக்கங்கள், விசேட தகுதிகள், மேன்மைகள், இறை அருள் யாவும் தாமாகவே ஏற்படும். இவர்களே சைவ சமயத்தின் உண்மையான தொண்டர்களாக நற்சேவை செய்வதற்கும், நித்திய சிவபூசை செய்வதற்கும் ஆலயங்களில் கிரியைகள் செய்வதற்கும் தகுதி உடையவராவர். தீட்சை பெறுபவர்கள் தினசரி வாழ்க்கையில் சில பணிகளைக் கட்டாயமாகச் செய்யவேண்டும். சிலவற்றை விலக்கவேண்டும். தீட்சை பெற்றவர்கள் மோட்ச நிலையை அடைவர் என்பது சைவ மக்களின் நம்பிக்கை. தீட்சை பெற்று இறைவனை அடைவோம். எமது புனிதமான சமயத்தின் செயற்பாடுகளை நாம் உள்ளன்போடு பேணிப்பாதுகாக்க முன்வரவேண்டும்.



## கவிதாஞ்சலி

## எங்கள் தலைவி எங்கே....!

ஈழத் தமிழரின் தலைவி எங்கே...?
இணையற்ற ஆன்மீகச் சேவகி எங்கே....!
வேளை முழுவதும் அறப்பணி காத்த அன்னை எங்கே...!
விடிவுக்குழைத்த தியாக சீலர் எங்கே...!
வாழ வழிகாட்டிய நாயகி எங்கே...!
வனிதையர் அணியின் திலகம் எங்கே...!
சூலம் வாளேந்திய துர்க்கையின் பக்தை எங்கே...!
துர்க்காபுரத்தின் அரசி எங்கே...!
நற்றமிழ் வளர்த்த நாயகி எங்கே...!
நாவலர்க்குப் பின் எழுந்த காவலர் எங்கே...!
சொற்றமிழ் பாடிய சுந்தரி எங்கே...!
சுதந்திரம் விரும்பிய தோழி எங்கே...!
அகிலம் போற்றிய அன்னை எங்கே...!
ஆதரவற்ற பிள்ளைகளின் தாயார் எங்கே....!
வயோதிபர் மடத்தின் மாதா எங்கே...!
வளரும் அறக்கொடை நிதியத்தின் அம்மா எங்கே...!
சிவபூமி ஆண்ட சிவத்தமிழ்ச் செல்வி எங்கே...!
செந்தமிழும் சைவமும் வாழ உழைத்த உத்தமி எங்கே...!

*மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்.*

**அகந்தையை விட்டுவிடுபவனுக்கு கருணை வந்துவிடும்.**

உ

(தொடர்ச்சி...

# சைவக்கிரியைகள்

தமிழ்ஞான வித்தகர் பொன். சுகந்தன் அவர்கள்

## பூர்வக் கிரியைகள்

மரணத்திற்கு முன்பாக நிகழும் கிரியைகளை பூர்வக் கிரியைகள் என்போம். இந்தப் பூர்வக் கிரியைகளின் பிரிவுகளாவன.

1. இருதுசங்கமனம்
2. கருப்பாதானம்
3. பும்சவனம்
4. சீமந்தம்
5. ஜாதகருமம்
6. கர்ணவேதனம்
7. உத்தாபனம்
8. நாம கரணம்
9. உபநிஷ்கிரமணம்
10. அன்னப் பிராசனம்
11. பிண்டவர்த்தனம்
12. சௌளம்
13. வித்தியாரம்பம்
14. உபநயனம்
15. காண்டோப கரணம்
16. காண்ட மோசனம்
17. சமாவர்த்தனம்
18. விவாகம்
19. தீட்சை
20. சந்தியா வந்தனம்
21. சிவபூசை
22. சிவாசிரமம்

போன்றன அடங்குகின்றன. சைவ சமயத்தவர்களின் நற்காரியங்களோடு தொடர்புடைய பூர்வக் கிரியைகளை நோக்குவோம்.

### இருது சங்கமனம்

இக்கிரியையானது விவாகத்தின் பிற்பாடு தம்பதிகளின் முதல் நாட் சேர்க்கைக்கு முன்பதாக நடைபெறுகின்ற கிரியையே இருது சங்கமனமாகும். பெண்ணானவள் பூப்படைந்த மாதம், நாள், திதி, நட்சத்திரங்கள் போன்றவற்றினால் ஏற்படக்கூடிய தோஷங்களை நீக்கும் பொருட்டுச் செய்யப்படுகின்ற ருது சாந்தியே இதுவாகும்.

தம்பதிகளைச் சிவாக்கினிக்கு மேற்குப் பக்கமாக இருத்தி, சிவ மந்திரங்களால் ஓமஞ்செய்து மணமகனால் மணமகளுக்கு விபூதி அணிவித்து ஆசீர்வாதம் செய்துவிடுதல் இதற்குரிய கிரியையாக அமைகின்றது. அத்தோடு சிவகும்பப் பூசையுடனும், சிவாக்கினி காரியத்துடனுமே நடைபெற வேண்டியது. நீரிலே நீராடிய பிற்பாடு சிவகும்பத்தினாலும் நீராட்டப்பட்ட பிற்பாடே பெண்ணின் ருதுதோஷம் சாந்தியானதாகும். அதன் பிற்பாடுதான் ஆராத்தி எடுத்தலும் தீப ஆலத்தி சுற்றலும் நடைபெறும்.

இன்றைய நடைமுறையைப் பார்க்கும்போது, இது சற்றுத் தளர்ந்து தான் காணப்படுகின்றது என எண்ணத் தூண்டுகின்றது.

ஒருவன் கற்ற நூலின் அளவாகவே நுண்ணறிவு அமையும்.

**கருப்பா தானம்**

இக்கிரியையானது கருப்பத்தினை நிலைபெறச்செய்யும் பொருட்டும் கருப்பையில் உற்பத்தியான கருவானது உறுதிபெறவேண்டும் என்பதற்காகவும் பெண் கருவுற்ற அந்த மாதத்தில் நடைபெறுகின்றது.

ஒரு நன்முகூர்த்த நாளிலே சிவாக்கினியானது வளர்க்கப்பட்டுச் சக்தி யோஜாத மந்திரங்களால் நூற்றெட்டு ஆகுதியை ஆக்கி அத்தோடு கோதுமை உழுந்து போன்றவற்றை அரைத்துப் பால், நெய், தயிர் என்பவற்றோடு அதனைக் கலந்து பெண்ணைப் பருகச் செய்து பிற்பாடும் சத்தியோஜாத மந்திரத்தால் இருபத்தைந்து தடவைகளில் ஆகுதி பண்ணித் தலைவன் தலைவிக்குக் கொடுக்கின்ற நிகழ்வாக இது அமைகின்றது.

ஆனால் இன்றைய கால நடைமுறையில் இந்நிகழ்வும் சற்றுத் தளர்ந்து குறைவடைந்துதான் காணப்படுகிறது என்பது கண்கூடாகவே உள்ளது.

**பும்சவனம்**

இக்கிரியையானது ஆண்குழந்தையைப் பெறுதல் காரணமாக கருவுற்ற இரண்டாம் மாதத்தில் அல்லது நான்காம் மாதத்தில் நடைபெறுகின்றது. அதுமட்டுமன்றி இக்கிரியையில் விஷேட அம்சங்களும் அடங்கியுள்ளன. கிரியையின் முதலில் விநாயக பூசையும் இடம் பெற்றுப் பின் சிவாக்கினி ஓம்புதலும் நடைபெறும். இவைதவிர கோதுமை, உழுந்து போன்றவற்றை அரைத்துக் கருப்பாதானத்தில் செய்ததே போன்று பருகச்செய்தல் நிகழ்வும் நிகழும்.

இதனைவிடச் சிவாக்கினிக்கு அருகிலே பெண்ணைக் கிழக்குப் பக்கமாக இருத்தி ஆல், அரசு, அத்தி, பலாசு மொட்டுக்களைப் பிழிந்து பெண்ணின் மூக்குத் துவாரத்தில் விடப்படுதல் விஷேடமாக அமைகின்றது.

இவ்வாறான நடைமுறையும் இன்றைய காலத்திற்கு விலகியே நிற்பதனை அவதானிக்க முடிகின்றது.

**சீமந்தம்**

சீமந்தமும் பெண்ணின் முதற் கர்ப்பத்தின்போது செய்கின்ற சடங்காகும். இதனை நடு உச்சி வகிர்தல் எனவும் அழைப்பார்கள். இது ஆறாம் மாதத்தில் அல்லது எட்டாம் மாதத்தில் நடைபெறும். இச் சடங்கின்போது சிவாக்கினிக்கு அருகிலே கர்ப்பவதியை அமர்த்தியபின் பன்றிமுள், தருப்பை, அத்திக் குச்சி, என்பவற்றினைக்கொண்டு தனித் தனியே நான்கு தடவை உச்சி வகிர்ந்து, அதன் பின்னர் நான்கினையும் ஒன்றாக எடுத்து ஒருமுறை "ஓம் தேச தேச சித்ரூபாய நேத்ரத் த்ரயாய ஹூம் ப்ண் ஊம" என்று கூறி வகிர்ந்து அதன் பின்பும் மந்திர சகிதமாக அவற்றைத் தலையின் மேல் வைத்தல் இக்கிரியையில் பிரதான மானதொன்றாகும்.

அத்தோடு கோதுமையும் உழுந்தும் அரைத்துப் பருகச்செய்தல், தலைவனைக் கொண்டு தலைவியின் வயிற்றைத் தடவுவித்தல் அத்தோடு கிரியையின் நிறைவின்போது தம்பதிகளை அறுகரிசியிட்டு வருகைதந்த உறவினர்கள் வாழ்த்துவார்கள்.

இவ்வாறாக இல்லற வாழ்வின் ஈடேற்றத்தின் பொருட்டுக் கடைப்பிடிக்கப்

*மனதை ஒருமுகப்படுத்துவதற்கு மந்திரோபதேசம் உதவி செய்கிறது.*

பட்டு வந்த சீமந்தம் இன்றும் கடைப்பிடிக் கப்பட்டு வருகின்ற போதிலும், குறை வடைந்து அருகியே காணப்பட்டு வரு வதனை அவதானிக்க முடிகின்றது.

எனவேதான் பொதுவாகவே சமயக் கிரியைகள் யாவும் மக்களின் ஈடாட்டமற்ற ஈடேற்றத்தினைக் கருத்திற் கொண்டு இயற்றப்பெற்றவை. ஆதலால் சைவ சமயத்தவர்களாகிய நாங்களும் எமது சடங்கு முறைகளை முறையாகக் கடைப்பிடித்து முன்னேறுவோம்.

**ஜாத கருமம்**

இக்கிரியையானது குழந்தை பிறந்தவுடன் செய்யப்படுவது. குழந்தை யானது பிறந்ததும் தந்தை ஸ்நானஞ் செய்து, விநாயக பூசையும் சிவாக்கினி காரியமும் நிகழ்த்தி, அஸ்திர மந்திரத் தால் ஆகுதி பண்ணி, மந்திர சகிதம் குழந்தையின் நாபிக் கொடியை அதா வது கொப்பூழ்க் கொடியை வெட்டி அங்க மந்திரங்களை ஓதி, குழந்தை யினைத் தூய்மை ஆக்கி, தொடர்ந்து பத்துநாள்வரை அக்கினி தணியாமல் வைத்திருந்து, நெய், வெண்கடுகு போன்ற வற்றால் ஓமஞ் செய்துவரவேண்டும்.

இதுவே ஜாத கருமம் என்னும் கிரியை முறையாக அமைகின்றது. இக் கிரியை முறையானது இன்று அருகிக் கொண்டு போகின்றது என்பதனைவிட அற்றுப்போய் விட்டது என்பதுதான் சரி யாக இருக்கும்.

கிரியைகளின் நன்மைகளும் நலங்களும் நமக்கே கிட்டுகின்றன. அவ் வாறான கிரியைகளை அழிந்து போகாது அணைத்துக் காப்பதனால் நன்மையைத் தவிர தீமை ஏற்படுவதில்லை. இன்றைய விஞ்ஞான உலகத்தில் ஆக்கத்தைவிட அழிவிற்கே அறிவைப் பயன்படுத்து வதால் இவ்வாறான நற்கிரியைகள் மங்குகின்றன.

**கர்ணவேதனம்**

கர்ணவேதனம் என்றால் காது குற்றுகின்ற கிரியையினை இது குறிக் கும். குழந்தையானது பிறந்து பத்தாம் நாளில் அல்லது பன்னிரண்டாம் நாளில் அல்லது முப்பத்தோராம் நாளில் நல்ல நாள் பார்த்து, கர்ணவேதனம் எனப்படும் காதுகுற்றுதற் கிரியை நிகழ்வானது நடைபெறும். ஏனைய கிரியைகளைப் போன்று இது பெரிதான கிரியை அல்லா விட்டாலும் கூட பிள்ளையார் பிடித்துக் கும்பம் வைத்து வணங்கி இக் கிரியை யினை நிகழ்த்துவார்கள்.

இந்தக் கிரியை முறையும் நடைமுறையில் மக்கள் மத்தியிலே இருக்கின்ற அதேவேளை, இந்நிகழ்வும் தற்போது குறைந்துதான் உள்ளது. ஏனெனில் அந்தக் காலங்களில் ஆண் பிள்ளைகளுக்கும் காது குற்றுவார்கள். ஆனால் இப்போது அந்நிலை மாற்றம் பெற்றுப் பெண் பிள்ளைகளுக்கு மட்டுமே காது குற்றப்படுகின்றது. பல இடங்களில் இவ்வாறுதான் நிகழ்ந்து வருகின்றது.

**உத்தாபனம்**

உத்தாபனம் என்பது குழந்தை யைப் பிரசவ அறையிலிருந்து வெளிக் கொணர்தல் நிகழ்வாகும். ஆசௌச நீக்க எல்லைக் கணக்குக்குத் தக்க படியாகப் பத்துநாள் அல்லது பன்னிரண்டு நாள் முப்பது இரவுகளின் பின் இக் கிரியை யானது நடைபெறும்.

அன்றைய தினம் வீட்டினை

முழுவதுமாகச் சுத்தி செய்து விநாயக பூசையும் புண்ணியாகவாசனமும் செய்து சம்பந்தப்பட்ட எல்லோரும் பஞ்ச கவ்வியம் பருகுதல் வேண்டும். குழந்தையினைப் பொன் அணிந்து சிறப்பித்தலும் இத் தினத்தில் நடைபெறும்.

இதனையே நம்மவர்கள் முப்பத்தொன்று எனக் கொண்டாடுவது வழக்கம். இதனைச் சில இடங்களில் கேலிக்கைக்குரிய நிகழ்வு போன்றும் சிலர் நிகழ்த்துவது வேதனைக்குரிய விடயமாக அமைகின்றது. மாமிசங்களை உண்டு இந்நிகழ்வினைக் கொண்டாடுவது விரும்பத் தக்கதன்று. நமது கிரியைகளுக்கு ஏற்ப முறையாக ஒழுகும் பட்சத்தில்தான் அதன் பலன்கள் நம்மைப் பலப்படுத்தும்.

**நாம கரணம்**

நாம கரணம் என்பது பெயரிடுதல். இது ஆசௌச கழிவு நாளிலே நடைபெறும். இதன்போது விக்கினேஸ்வர பூசை, சிவாக்கினி காரியம், சிவகும்பப் பூசை, அறுகரிசி, ஆசீர்வாதம் போன்றன நிகழும்.

பெயரானது தெய்வப் பெயராக நட்சத்திர எழுத்துக்களும் இடம்பெறக் கூடியதாக இருத்தல் வேண்டுமென்பது இதன் விதியாக உள்ளது.

ஆனால் இன்றைய நிலையைப் பார்த்தால் பெயர்கள் என்பது தெய்வப் பெயர்களுடன் தொடர்புபடாத பெயர்களாக மட்டுமன்றிச், சற்றும் சகிக்க முடியாத பெயர்களாகவும் அமைந்து விடுகின்றன.

இதற்கொரு கதையும் கூறுவார்கள். அருணாசலம் என்பவர் சோதிடரை அணுகித் தனது பிள்ளைக்கு எனது பெயரில் பாதியும் எனது மனைவியாகிய வண்ணமலரின் பெயரில் பாதியும் எண் பொருத்தப்பாடும் இருக்கவேண்டுமென நிபந்தனை விதித்ததன் பிரகாரம் சோதிடரும் நிபந்தனைக்கு அமைவாகச் சிரமப்பட்டுப் பெயரும் எடுத்துவிட்டார். அடுத்த நாள் அருணாசலம் வந்து பெயரைக் கேட்டபோது அதிர்ந்தார். "மலசலம்" என்றார் சோதிடர். தங்கள் அருணாசலம் என்ற பெயரில் பாதியும் வண்ணமலர் என்ற உங்கள் மனைவியின் பெயரில் பாதியும் எடுத்துத் தங்களது நிபந்தனைப் படியே பெயர் வைத்திருக்கின்றேன் என்றார். மலர் + சலம் என்பதனைச் சேர்த்து "மலசலம்" என வைத்திருப்பதாகக் கூறிச் சோதிடரும் சிரித்துக் கொண்டார்.

இது நகைச்சுவைக் கதையாக மட்டும் இருக்கவில்லை. ஒரு பிள்ளைக்குப் பெயர் சூட்டும் நிகழ்வானது எவ்வளவு முக்கியமானது என்பதனைக் காட்டுகின்றது. எனவேதான் நம் முன்னோர்கள் இறைப் பெயர்களைச் சூட்டுகின்ற போது தெரிந்தோ தெரியாமலோ அப்பெயரினை உச்சரிக்கின்றபோது நமக்கு நலம் உண்டாகின்றது. எனவேதான் சைவக்கிரியைகளில் நாமகரணமாகிய பெயர் சூட்டுகின்ற நிகழ்வானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே அமைகின்றது எனலாம். (தொடரும்....

ஒருவன் செய்யும்சேவை வருங்கால உலகத்தை ஒழுங்குபடுத்தி அமைக்கும் முயற்சியைத் தூண்டவேண்டும். வெறும் வாழ்வு, சமுதாய வாழ்வு, நல்வாழ்வு என்று வாழ்க்கையை மூன்றாகப் பிரித்து மக்களின் நல்வாழ்வையே ஒவ்வொருவரும் தனது லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

**நல்ல இதயம் இறைவனின் சரணாலயம்.**

உ

# ஆலயத்தில் மகோற்சவம்

திரு செல்லத்தம்பி சுரேந்திரா B.A அவர்கள்

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிற்கும் இறைவன் ஞானிகளின் உள்ளத்திலும் கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். இதனை மணிவாசகர் "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் குணங்குறிகளைக் கடந்து நிற்கும் இறைவன் ஆன்மாக்களுக்காக அருள் செய்யும் வகையில் தனது தடத்த நிலைக்கு இறங்கிவந்து எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயம் எனப்படுகிறது. ஆலயம் என்பது "ஆன்மாக்கள் இலயிக்கின்ற இடமே" ஆகும். இந்து மதத்தில் ஆலயங்கள் வரலாற்றுச் சின்னங்களாகவும், வழிபாட்டு நிலையங்களாகவும் தத்துவ வடிவங்களாகவும் கலைக் களஞ்சியங்களாகவும் விளங்குகின்றன. உலகமெலாம் நிறைந்து விளங்குகின்ற இறைவன் ஆலயத்திலே வெளிப்பட்டு அருள் புரிகின்றான். பசுவின் மடியிலிருந்தே பால் தோன்றுவதுபோன்று ஆலயத்தில் இறைவன் வெளிப்படுகிறான் என்று கூறுவர். இவ்வாறு சிறப்புப்பெறும் ஆலயத்தில் மகோற்சவம் முக்கியத்துவம் பெறுவதாகின்றது.

மகோற்சவம் கொடித்தம்பம் உள்ள ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகிறது. ஆலயத்தில் நடைபெறுகின்ற மகோற்சவம் ஐந்தொழில்களை விளக்கி நிற்கிறது. அதாவது கொடியேற்றத் திருவிழா படைத்தல் தொழிலையும் வாகனத் திருவிழா காத்தல் தொழிலையும் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலையும் மௌனோற்சவம் மறைத்தல் தொழிலையும் தீர்த்தத் திருவிழா அருளல் தொழிலையும் விளக்கி நிற்கின்றன.

இவ்வாறு படைத்தல் தொழிலோடு மகோற்சவம் ஆரம்பிப்பதால் பிரமோற்சவம் எனும் பெயரையும் பெறுகின்றது. பத்துநாள் விழா நடைபெறுவதையே பிரமோற்சவம் என்பர். மகோற்சவம் கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, பிருத்சங்கிரகணம், அங்குராப்பணம், பேரிதாடனம் முதலியவைகளோடு ஆரம்பித்துக் கொடியேற்றம் தொடங்கி தீர்த்தம் வரை நடைபெறும். தீர்த்தத் திருவிழா நட்சத்திரம் அல்லது திதியை அடிப்படையாகக்கொண்டு இடம்பெறும்.

மகோற்சவத்தில் கொடியேற்றத் திருவிழாவில் கொடிமரம் பதியையும் கொடிச்சீலை பசுவையும் தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். இக் கொடிச்சீலையில் நந்தி உருவம் எழுதப்படும். இவ்வாறு கொடியேற்றுவதானது "கீழ்நிலையிலிருக்கும் ஆன்மா மேல் நிலைக்குச் செல்லும் தத்துவத்தைக் குறிக்கின்றது" அன்றிரவே யாகபூஜையும் ஆரம்பமாகும். யாகத்தில் வைக்கப்பட்ட கும்பங்கள் இறுதியில் அபிஷேகம் செய்யப்படும்போது அதுவே பிராயச்சித்தமாகிவிடுகின்றது.

வாகனங்களாக அமைந்த ஆன்மாக்கள் தீமையிலிருந்து காக்கப்பட்டவர்கள். உதாரணமாக கஜமுகாசுரன் பிழையான பாதைக்குச்சென்று கொண்டிருந்தான். அதிலிருந்து விடுவிக்கப்பட்டு

அருள் பூமியில் அருள் செய்யும் நோக்கத்தில் எழுந்தருளியுள்ளான். எனவே தீர்த்தத் திருவிழாவின் முக்கிய நோக்கம் "ஆன்மாக்களின் அகவினைகளைக் கழுவுவதாகும்" தீர்த்தத் திருவிழா அன்று இறைவனின் அஸ்திரம் என்று கூறப்படும் ஆயுதம் தீர்த்தமாடிய பின்பே மக்கள் தீர்த்தமாடுவர்.

மௌனோற்சவம் என்பது மறைத்தல் தொழிலைக் குறிக்கும். மௌனம் ஞானத்திற்கு அறிகுறியாகும். தீர்த்தத் திருவிழா அன்று திருவூஞ்சலுக்கு முன்பு மௌனோற்சவம் நடைபெறுகின்றது. வாத்திய முழக்கமின்றி இறைவன் வீதிவலம் வருவார். திருவூஞ்சல் அங்குமிங்கும் மாறி மாறிப் பிறவி எடுக்கின்ற உயிர்களின் ஈடேற்றத்திற்காகச் செய்யப்படுவது ஆகும். திருக்கல்யாண உற்சவம் உலக இயக்கத்தைக் குறிப்பதாகும். இறைவன் சக்தியைச் சேர்வதால் மீண்டும் படைத்தல் ஆரம்பிக்கப்படுகின்றது.

## ஆச்சிரமத்தால் 04.04.2008 தொடக்கம் 30.05.2008 வரை மேற்கொள்ளப்பட்ட மேலதிக பணிகள்

### *04.04.2008 வெள்ளிக்கிழமை*

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி காந்தன் என்பவரது வைத்திய செலவின் நிமித்தம் ரூபா 5000/= வழங்கப்பட்டது.

### *16.05.2008 வெள்ளிக்கிழமை*

யா/ விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி மாணவி செல்வி த. ரஜிதா என்பவரது கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்குமுகமாக பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்று கையளிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினரிடம் முன்பள்ளி மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

### *23.05.2008 வெள்ளிக்கிழமை*

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி குடத்தனை பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்குரிய சத்துணவுகள் மாதந்தோறும் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

### *30.05.2008 வெள்ளிக்கிழமை*

பத்தமேனி பாரதி வீதியைச் சேர்ந்த செல்வி துரைராசா சுமதினி என்பவருக்கு மாதாந்த கல்விச் செயற்பாட்டிற்குரிய நிதி வழங்கப்பட்டது.

உ

(தொடர்ச்சி..

# ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*9. ஐயம் இட்டு உண்.*

ப-ரை. ஐயம்- பிச்சையை, இட்டு- (இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்- நீயும் உண்ணு.

*10. ஒப்புரவு ஒழுகு.*

ப-ரை. ஒப்புரவு- உலகநடையை அறிந்து, ஒழுகு- (நீ அந்த வழியிலே) நட.

*11. ஓதுவது ஒழியேல்.*

ப-ரை. ஓதுவது- (அறிவு நூல்களை) வாசிப்பதை, ஒழியேல்- (நீ மரண பரியந்தம்) விடாதே.

*12. ஔவியம் பேசேல்*

ப-ரை. ஔவியம்- பொறாமை வார்த்தைகளை, பேசேல்- நீ பேசாதே.

*13. அஃகம் சுருக்கேல்.*

ப-ரை. அஃகம்- தானியவிலையை (தானிய அளவை), சுருக்கேல்- (நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே.

*14. கண்டொன்று சொல்லேல்.*

ப-ரை. கண்டு- (ஒன்றைக்) கண்டு, ஒன்று- வேறொன்றை, சொல்லேல்- (நீ சாக்ஷியாகும்போது) சொல்லாதே. (கண்டபடியே சொல்லென்பது கருத்து)

*15. ஙப்போல் வளை.*

ப-ரை. ஙப்போல்- ஙகரம் (தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை- (நீ பிரயோசனமுள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதன் வருக்கங்களாகிய ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ என்கின்ற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும், ஙகரத்தின் பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்விச் செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னதுத் தழுவுவதன்றி உன்பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாம்.

*16. சனி நீராடு.*

ப-ரை. சனி- சனிக்கிழமை தோறும், நீர் ஆடு- (எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலை முழுகு. புதன்கிழமையிலும் முழுகலாம்.

(தொடரும்....

உ

(தொடர்ச்சி..

# மனிதப் பிறவியின் மாண்பு

**ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள்**

உண்பதும் உறங்குவதும் போகம் அனுபவிப்பதுதான் வாழ்க்கை. வாழ்க்கையின் பயனாக அல்லது வெற்றியாகப் பெறும் பொருள், புகழ் போன்றவைதான் என்று கருதும் பெரும்பாலானோர் வாழ்நாள் முழுதும் பாடுபடுகின்றனர். ஒரு சிலர் வாழ்க்கையின் நல்ல பயன் எது என்று கருதாது தற்கொலை செய்து தமது பொன்னான ஊனுடலை அழித்து விடுகின்றனர். இவ்வாறு உடம்பை அழித்தல் தகாதது எனத் திருமூலர் நியாயம் காட்டுகின்றார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

மனிதன் ஊன் உடம்பினுள் இறைவன் இருக்கின்றான். ஆகையால் நாம் எமது உடலை அழிக்காது உயிருடன் இருக்கவேண்டுமென்பது திருமூலர் கோட்பாடு. மனித உடல் தவிர்ந்த பிற உயிர்களின் ஊனுடலிலும் இறைவன் இருக்கின்றான். அஃறிணை உயிர்களுக்கெல்லாம் பகுத்தறிவு என்னும் அறிவில்லை. அதனால் அவைகளிடம் தெய்வீக உணர்வு இல்லை. மனிதனிடம் இறைவன் சிறப்பாக ஆறாவது அறிவைக் கொடுத்துள்ளான். மனிதனின் உடல் அமைப்பும் சிவலிங்கம் போன்ற அமைப்பாக உள்ளது. இதனை அப்பர் சுவாமிகள்,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மை ஆக மனமணிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"

எனப் பாடுகின்றார்.

காயம் என்பது உடம்பு. உடம்பினை இறைவனாகிய உத்தமன் தனது கோயிலாகக் கொண்டுவிட்டான். அதனால், இறைவன் கோயில் கொண்ட இவ்வுடலுக்கு விபத்துக்கள் ஏற்படாது பேணவேண்டும். மனம் அடிமைபூண்டு நல்வழி நடத்தல் வேண்டும். புறத்திலே காணப்படுகின்ற ஆலயங்களை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பதுபோன்று காயமாகிய கோயிலை அசுத்தப்படுத்தாது எப்போதும் உண்மை பேசுதல் வேண்டும். உடம்பினையும் மனிதனையும் மாசுபடுத்த வாய்

ஒன்றே போதும். பொய் பேசுதல் போன்ற தீய ஒழுக்கங்கள் எம்மை மாசுபடுத்தும். ஆன்மாவைச் சிவலிங்கமாகப் பாவனைசெய்து அன்பு, பணிவு முதலியனவற்றைப் பால், நெய், பஞ்சாமிர்தம் கொண்டு அபிடேகம், பூசை முதலியன செய்து வழிபடுதல் சாலவும் நன்று என அப்பரடிகள் அருளியுள்ளார். இதனை அகப்பூசை எனவும் கூறுவர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானாற்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

மனித உடம்பு பெருமை அடையும் தன்மையைத் திருமூலர் அருளியுள்ளார்.

பூசலார் நாயனார் இறைவனுக்கு ஆகம விதிப்படி ஆலயம் தனது உள்ளத்தில் அமைத்தாரெனப் பெரியபுராணம் கூறுகின்றது. ஆக, வேத காலந்தொட்டுச் சான்றோர் மனித உடலை ஆலயமாக அமைத்து வணங்கினர். இறைவன் எங்கேயும் இல்லை எமது உடலினுள்ளே அமைந்துள்ளார் என்பதை அப்பர் சுவாமிகள் திருவங்க மாலையில் தலைமுதலாகக் கால்வரையும் இறைவனை வணங்கவேண்டும் எனப் பாடிய பின்னர் இறைவன் எங்கேயும் இல்லை எமது நெஞ்சினுள்ளே தான் இருக்கின்றான். என்பதைத் "தேடிக் கண்டுகொண்டேன், திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்" என்று அருளுகின்றார். மனம் கொந்தளித்து அங்கும் இங்கும் அலைந்தால் இறைவனை அறிதல் அரிதிலும் அரிதாகும்.

"மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலை யூன்றிச்
சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வெண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே"

இவ்வுலகமானது நிலையற்றது. அவ்வாறு இந்த உடலும் நிலையில்லாதது. நிலையற்ற இவ்வுலகிலிருந்து நிலையுடைய பேரின்ப வீட்டை அடைய நிலையற்ற உடலைப் பயன்படுத்த வேண்டும். அப்பரடிகள் உலக வாழ்வை மாபெரும் சாகரமாக்கி அந்தச் சாகரத்தைக் கடக்க மனத்தைத் தோணியாக்கிப் புத்தியைத் தோணியை வலிக்கும் துடுப்பாக்குகின்றார். மனம் என்னும் தோணியில் கோபம், காமம் போன்ற சரக்குக் களை ஏற்றிக்கொண்டு பரந்த கடலில் மதன் என்று குறிப்பிடுகின்ற நான் எனது என்னும் ஆணவமாகிய பாறாங்கல்லுத் தோணியைத் தகர்க்கின்றபோதில் எனது புத்தியின் தன்மைகளை உணராது திகைத்து உன்னை உணர்ந்து கொள்கின்றபோது நல்ல உணர்வை அருளாய் திருவொற்றியூரில் வதிக்கின்ற சிவபெருமானே என உலக வாழ்வு உடலின் தன்மை பற்றி இவ்வாறு அருளியுள்ளார்.

உடம்பில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளுண்டு. இவற்றின் தொழிற்பாடுகள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. இதனை விட ஆணவம், கன்மம், மாயை என்ற

**ஏதாவது ஒன்றைப் பற்றிநிற்பதே உயிரின் இயல்பாகும்.**

மூன்று மலங்களும் உண்டு. புலன்களால் ஆத்மா அமைதி சாந்தி பெறுவது அரிதிலும் அரிதாகின்றது. உலகமாகிய சாகரத்தில் புத்தியானது பொறிவழி செல்வதனால் இன்ப துன்பங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. இந்திரியங்கள் அலைமோத ஆத்மாவிற்கு ஞானம் உண்டாகாது. எனவே மனித உயிரானது சிவனோடு ஐக்கியப்படும்போது தூய ஆத்மாவாகின்றது. ஆத்மா அழிவதில்லை. தூய ஆத்ம நிலைக்கு ஞானியால் வரமுடிகின்றது. ஆத்மாவை நெருப்பினாலும், வெள்ளத்தினாலும் அழிக்க முடியாது என்பதை உணருகின்றான். இதனால் எல்லா உயிர்களிடத்தும் இறைவனைக் காண்கின்றான். அவனிடம் விருப்பு, வெறுப்பு, உயர்வு, தாழ்வு என்ற பேதங்கள் இருப்பதில்லை.

"படைக்கலமாக உன் நாமத்தெழுத் தஞ்சும் நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தானே"

இவ்வாறு மாபெரும் ஞானியின் நிலை ஆகின்றது. இவ்வாறுதான் புராண கால மக்களிற்பலர் அரசர்களிற் சிலர் அறவோர், முனிவர், ரிஷிகள் நன்கு வாழ்ந்தனர். வாழ்ந்து காட்டினர்.

இன்று வாழுகின்ற மனிதர்களுக்குக் கடவுளில் பூரண நம்பிக்கை கிடையாது. கடவுளை நம்பினார் கைவிடப்படார் எனக் கூறுவோரும் கடலில் ஒருகால் வள்ளத்தில் ஒருகால் வைப்போராவர். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை என்பது ஔவையார் வாக்கு. சமயகுரவர் போன்றோர் இறைவனிடம் பூரணமாகத் தம்மை ஒப்படைத்தபின் மக்களை இறைவனிடம் ஆற்றுப்படுத்துகின்ற சமய போதனைகளும் அற்புதங்களும் செய்தனர். இதனால் இறைவனும் பற்பல அற்புதங்களை அருளினதாகப் புராணங்கள் வாயிலாக அறிகின்றோம்.

மனித வாழ்வில் அதி சிறப்பான பதவிகள், அரசன், மந்திரி இவ்வாறாகப் பல பதவிகளைக் குறிக்கலாம். ஆதி காலம் தொடக்கம் பதவிகளில் உயர்ந்தோர்க்குப் பாதுகாப்பாகப் படைகள் அதாவது காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை யென்றிருந்தன. சாதாரண மக்கள் கத்தி, பொல், வாள் இவ்வாறு சிறு ஆயுதங்களைக் காவலாகக் கொண்டு செல்வர்.

இறைவனைப் பூரணசரணாகதி அடைந்தவர்கள், அகக்கவசமாக மந்திரங்களையும் புறக்காவலாக விபூதி, உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்களையும் பக்தியுடன் அணிந்து செல்வர். இவ்வாறுதான் சமணர் காலத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்தார்.

அகப் பகைவர்களும் புறப்பகைவர்களும் தம்மை வருத்தாது தம்முடைய இலட்சியக் குறிக்கோளான பாதையில் இடையூறு நேராமல் படைக்கலமாகத் திருவைந்தெழுத்தை நாவிலே அழுத்திக் கொண்டார்கள். எவ்வித இடையூறும் செய்யாது ஏழு பிறவிகளிலும் உன்னையே ஆட்கொண்டுவிட்டேன். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி என் மனத்தே,

வழுவாதிருக்க வரந்தரவேண்டும் என்று ஓர் இடத்தில் அப்பரடிகள் இறைவனிடம் வரம்கேட்டுள்ளார். நீ என்னைப் போ போ என்று தள்ளினாலும் போகமாட்டேன். எப்போதும் வெண்மையான தூய திருநீறு, உருத்திராக்கம் முதலியன அணிந்து உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன். என்னைக் கைவிட்டு விடாதேயென்று வைராக்கியத்துடன் இறைவனிடம் வேண்டிக்கொள்ளுகின்றார். (தொடரும்...

## காணக்கண் பெறுமே.....

## செல்வச்சந்நிதியான் மகா கும்பாபிஷேகக் கவிதை.

வானுயர அருள் வழங்கும்
வாரிதியின் சந்நிதியில்
பதியருள் பங்குனி - வளர்
மதி மூன்றாந் திருநாளில்
கோவிலுமதன் கோபுரங்களும்
அணிந்த திருக்கலசங்கள்
கும்பத்துநீர் சொரிய
உள்ளிருக்கும் பேரருளை
வாரி வழங்கக் காண்போமே (வானுயர)

தேவாதி தேவர்களும்
அபிஷேகித் திறைஞ்சும்
ஞாலத் தெய்வமே....
பூவரசரியணையில் - அமர்ந்து
அருள் செல்வக் கோமானே
ஞாலத்தில் வேலவன் - நடமாடி
ஆறியருகமர்ந்தருள் சொரியும்
சந்நிதிக் கோவிற் கும்பாபிஷேகம்
காணக் கண் பெறுமே...... (வானுயர)

வெள்ளி மயிலாசனத்தில் - துள்ளி
வலம் வந்தியங்கு மெங்கள்
வள்ளி மாணாளன் கோவிலெங்கும்
பாலும் இளநீருஞ் சொரியத்
தேனும் பன்னீரும் பெருகப்
பழமும் பஞ்சாமிர்தமும் பொழிய
உள்ளிருந்தருளுமெங்கள்
தேவர் தேசிகன் திருத்தாளைப்
பணிந் தெந்நாளும் வாழ்த்துவமே (வானுயர)

*திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்.*

**ஒருவன் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.**

உ

# கதிர்காம முருகன் திருப்பள்ளியெழுச்சி

**திரு வ. சிவநேசன் அவர்கள்**

கந்தனே கதிர்காம மைந்தனே முருகா
காலையுமானது கதிரவன் எழுந்தனன்
சூழலிலுள்ள தடங்களில் எல்லாம்
செம்மலர்க்கமலங்கள் சேற்றிலே மலர்ந்தன
தேன் உண்ணும் வண்டுகள் ரீங்காரம் செய்து
ஓங்கார ஒலிதனை எங்கனும் பரப்பின
ஈங்இந்த வேளையில் எங்களுக்கருள் தர
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

யாத்திரை வந்த அடியவர் எல்லாம்
அருட்பள்ளி தரிசிக்க மனதிலே நினைந்து
கங்கையில் இறங்கி தீர்த்தமும் ஆடி
கையிலே அர்ச்சனை தட்டுடன் வந்தனர்
வாயில் முன்கோபுர மணியது அசைய
ஓங்கார நாதம் எங்கனும் நிறைந்தன
ஈங்இந்த வேளையில் எங்களுக்கருள் தர
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

ஐங்கரன் வாசலில் அருள்மணியோசை
மங்களகரமாய் செவிகளில் நுளைந்தன
பூசகர் விருப்பாய் மகிழ்வுடன் வந்து
திருப்பள்ளி எழுச்சிக்கு ஆவன செய்து
பால்தனை அமுதாய் அன்புடன் சேர்த்து
தூபத்தை காட்டி தீபத்தை எடுத்தார்
ஐங்கரன் பூசையும் மகிழ்வாய் நடந்தது
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே.

ஐங்கரன் பூசையும் சிறப்பாய் முடிந்தது
அடியவர் எல்லாம் ஒன்றெென சேர்ந்து
தங்களின் வாசலில் தவிப்புடன் நின்றனர்
பூசைக்கு வேண்டிய இன்னமு தெல்லாம்
மங்கள கரமாய் சுமந்தும் வந்தனர்
மேளங்கள் முழங்கின மணிகளும் ஒலித்தன
மங்கள கரமாய் தரிசனம் தந்திட
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே.

திரைதனில் கண்டனம் திவ்வியதரிசனம்
அருளமுதூட்டும் காட்சியும் கண்டனம்
பூசகர் மனமது உருகி விரும்பி
திரைதனில் தங்களை தழுவிடும்போது
கண்டனம் தரிசனம் உள்ளமும் குளிந்தது
உற்சவகாலத்தில் அற்புத தரிசனம்
தினம் தினம் கண்டு திருவருள் பெற்றிட
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

ஆரார்த்தி பெண்கள் ஆவலாய் வந்து
பூர்வீக ஒழுங்கில் திருவிளக்கேற்றினர்
அடியவர் எல்லாம் ஒன்றெனச் சேர்ந்து
பாடினர் அருட்திரு நாமம்
அருட்திருநாமம் அலை அலையாக
ஆலயச்சூழலை அன்புடன் நிறைக்க
கண்டவர் அன்பின் பெருநிலைக் கிரங்கி
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

வைகறை எழுந்து வழிபட வந்தோர்
அணி அணியாக ஒருவர் பின் ஒருவர்
அன்புடன் அர்ச்சனை செய்ய நினைந்து
கோவிலின் சூழலில் பரந்து விரிந்தனர்
பூசையை முடித்த பூசகர் மகிழ்ந்து
திருநீறு தந்திட எங்கள் முன்வந்தார்
திருநீற்றின் ஒளியும் கற்பூர தீபமுமான
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

மாணிக்க கங்கையின் மாண்பான தீர்த்தம்
அபிஷேக தீர்த்தமாய் கோவிலை சேர்ந்து
பூசையின் முடிவில் புண்ணிய தீர்த்தமாய்
பூசகர் கையிலே ஏந்தியே வந்தார்
அடியவர் எல்லாம் இருகரம் நீட்டி
தீர்த்தத்தை வாங்கி அருந்தியே மகிழ்ந்திட
அன்பர்கள் உள்ளம் அனைத்துமே குளிர்ந்தன
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

அர்ச்சனை செய்திடும் அடியவர் ஓர் பால்
ஆவலாய் அருட்புகழ் பேசுவோர் ஓர் பால்
திருநாமம் பாடி திளைப்பவர் ஓர் பால்
திரையிலே தங்களை காண்பவர் ஓர் பால்
கங்கையில் தீர்த்தம் ஆடியே நின்று
கற்பூர தீபம் ஏந்துவோர் ஓர் பால்
எல்லோரும் பணிந்து ஏத்துதல் கண்டீர்
கதிர்காம ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

நாட்டின் நிலவரம் நன்கு நீர் அறிவீர்
நாம் படும் வேதனை நன்கு நீர் தெரிவீர்
எங்களின் பாவத்தை போக்கிட விரும்பி
தங்களின் திருக்கோயில் விரும்பியே வந்தோம்
வந்திட்ட எங்களின் துன்பங்கள் அகன்றிட
நாட்டினில் அமைதி நிரந்தரம் தோன்றிட
அனைவரும் ஒன்றாய் சேர்ந்து வாழ்ந்திட
கதிர்காமஜோதியே பள்ளி எழுந்தருளாயே

**வாழ்த்து**

கப்பித்தாவத்தையிலே கற்பக விருட்சமென
அற்புதங்கள் செய்யும் ஐங்கரனே - உன் பதியின்
திருப்பணிகள் நிறைவுபெற்று குறிப்பிட்ட காலத்தில்
குடமுழுக்கு ஆடி குடிமுழுதும் ஆண்டருள்


கதிரையம்பதியை நினைந்தோர்கள் வாழி
கதிரையம்பதிக்கு வந்தோர்கள் வாழி
கந்தனின் திருப்புகழ் சொன்னோர்கள் வாழி
கற்பூர தீபம் ஏந்தியோர் வாழி
நேர்த்திகள் செய்திடும் அடியவர் வாழி
நேர்மையும் பண்பும் கொண்டோர்கள் வாழி
தானங்கள் தர்மங்கள் செய்தோர்கள் வாழி
அற்புதம் நிறைந்த கதிரையம்பதியும் வாழி வாழி.

**எச்சரிக்கையுடன் இருக்க**

பணபலமும் மனித பலமும் படைத்த மனிதன் மனம்வைத்தால் விரும்பிய மாத்திரத்தில் உங்களுக்கு தீங்கிழைக்கலாம். அவனுடன் பேசும்போது நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஒருவேளை அவன் சொல்வதை எல்லாம் ஆமாம் என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடமைகளை மறந்து சோர்வுறுகிறவர்கள் புகழ்பெற முடியாது.**

உ





# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகால நிகழ்வு

**கொடியேற்றம்**
**30.08.2008 சனிக்கிழமை பின்னிரவு**

**காலைத் திருவிழா ஆரம்பம்**
**03.09.2008 புதன்கிழமை**

**பூங்காவனம் 10ம் திருவிழா**
**08.09.2008 திங்கட்கிழமை**

**சப்பறத் திருவிழா**
**13.09.2008 சனிக்கிழமை**

**தேர்த்திருவிழா**
**14.09.2008 ஞாயிற்றுக்கிழமை**

**தீர்த்தத்திருவிழா**
**15.09.2008 திங்கட்கிழமை**

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் மூலமாக அமைவது நித்திய அன்னப் பணியேயாகும். அந்தவகையில் ஆச்சிரமப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பல வகையில் ஆதரவு நல்கும் அன்பர்கள், அடியார்களுக்கு சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்கவேண்டும் என பிரார்த்தித்து, வழமையான ஆதரவை நல்கி உற்சவ காலத்தில் நடைபெறும் அன்னப்பணிக்கு தங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

சுபம், சாந்தி.

**சந்நிதியான் ஆச்சிரமம்.**

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க. இல. 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| T.P.NO. 021- 2263406 | பருத்தித்துறை. |
| 060 - 2219599 | |
| FAX.NO. 021- 2263406 | |

**www. sannithiyan. org**

உ

(தொடர்ச்சி...

## 2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| பரஞ்சோதி பத்மசோதி | கரவெட்டி கிழக்கு | 15000. 00 |
| வசந்தி செல்வநாயகம் | | 1000. 00 |
| M. இந்திரசேகரம் குடும்பம் | அவுஸ்திரேலியா | 60000. 00 |
| R. ரவீந்திரன் | அவுஸ்திரேலியா | 32000. 00 |
| R. மோகனதாஸ் புலவனார் வீதி | கல்வியங்காடு | 2000. 00 |
| கே. ஜெயபாலசிங்கம் | அளவெட்டி | 900. 00 |
| த. விவேகானந்தராசா கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| குணரெட்ணம் பாலச்சந்திரன் | பிரான்ஸ் | 20940. 00 |
| ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | இராமலிங்கம்வீதி உடுவில் | 5000. 00 |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| த. வேலுச்சாமி இன்பர்சிட்டி | பருத்தித்துறை | 2000. 00 |
| கண்ணா சாந்தினி, ஜெயதாஸ் பிரபாலினி | கரவெட்டி | 15000. 00 |
| த. நாகேந்திரன் V.M. றோட் | பருத்தித்துறை | 1000. 00 |
| நிரஞ்சன் காருண்யா புலோலி தெற்கு | புலோலி | 1000. 00 |
| பாலச்சந்திரன் அர்ச்சனா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| இ. சரவணபவான் | தோப்பு அச்சுவேலி | 5000. 00 |
| சி. இரத்தினசிங்கம் ஆஸ்பத்திரி வீதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| R. மகாலிங்கம் | கொழும்பு | 1000. 00 |
| கி. நல்லம்மா | இடைக்காடு | 2000. 00 |
| Dr G. பவானி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வை மணிஐயர்) | நீர்வேலி 1மூடை அரிசி, தேங்காய் | 2000. 00 |
| திரு திருமதி கனகரெத்தினம் | நல்லூர் | 1000. 00 |
| சிவபூமி அறக்கட்டளை | கோண்டாவில் | 10000. 00 |
| Dr S. குகதாசன் கண் வைத்திய நிபுணர் | | 10000. 00 |
| கந்தையா வதனி பூருடிலேன் | அரியாலை 1மூடை அரிசி | 1000. 00 |
| கந்தையா லோகனேஸ்வரன் | அரியாலை | 1000. 00 |
| க. அருளானந்தம் பாடசாலை ஒழுங்கை | மல்லாகம் | 5000. 00 |
| Dr. ஸ்ரீஸ்கந்தராசா | லண்டன் | 15000. 00 |
| T. சண்முகவரதன் தொண்டைமானாறு | (அவுஸ்திரேலியா) | 15000. 00 |
| அமரர் கனகரெத்தினம் நினைவு க. கருணானந்தம் | கொழும்பு | 10000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஜனகன் புலேந்திரன் | கனடா | 5000. 00 |
| தம்பிராசா ஆரணி | அளவெட்டி | 10000. 00 |

| | | |
|---|---|---|
| கனகசபேசன் மூலம் பாலசுப்பிரமணியம் S. செல்லம்மா கனடா | | 10700. 00 |
| K. கனகசபேசன் | கனடா | 53500. 00 |
| க. யோகானந்தன் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு சின்னத்தம்பி | மல்லாகம் | 3000. 00 |
| யமுனா விவேகானந்தன் | புலோலி | 1000. 00 |
| சி. குருபரன் குருபரன் தொலைத் தொடர்பு நிலையம் கரணவாய் | | 1000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவு | பத்தமேனி | 1000. 00 |
| உதயராசா தாரணி | கோண்டாவில் வடக்கு | 5000. 00 |
| திரு. சற்குணராசா | புளியங்கூடல் | 1050. 00 |
| செல்வி துர்க்கா நிர்த்தனகுமாரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| வே. நேசமலர் ரீச்சர் | உடுப்பிட்டி | 21000. 00 |
| N. சுபாஸ்கரன் ஐயனார் கோவிலடி | கொடிகாமம் | 10000. 00 |
| S. சுந்தரமூர்த்தி யாமாவளவு | தெல்லிப்பளை | 1000. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி | 5000. 00 |
| சற்குணராசா இராசமணி குடும்பம் | ஜேர்மனி | 1000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி சாளம்பை | கரணவாய் மத்தி | 1000. 00 |
| சத்தியசீலன் சசிதரன் | நெல்லியடி | 1000. 00 |
| P. கலாஜினி | கொழும்பு | 1500. 00 |
| Dr முரளி ஊரிக்காடு | வல்வை | 1மூடை அரிசி 2000. 00 |
| சிதம்பரநாதன் சரஸ்வதி | அல்வாய் | 3000. 00 |
| சிவலோகநாதன் இராசலெட்சுமி | கைதடி | 1500. 00 |
| Dr S. இராசலிங்கம் இளை. வைத்தியப் பொறுப்பதிகாரி | தோப்பு அச்சுவேலி | 3000. 00 |
| க. தர்மபாலன் | நாயன்மார்க்கட்டு | 1மூடை அரிசி |
| ம. சிவபாதம் | கனடா | 7000. 00 |
| அருளானந்தம் தங்கேஸ்வரி | அல்வாய் | 1000. 00 |
| செ. செந்தூரன் கெம்டன்லேன் | தெகிவளை | 10000. 00 |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | 5000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | | 2000. 00 |
| வே. பாலசுந்தரம் | கரவெட்டி கிழக்கு | 1மூடை அரிசி 3000. 00 |
| சுரேஸ்ராம் ஞானகலா | கரணவாய் மத்தி | 15000. 00 |
| மதுரவாமதேவசர்மா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திவ்வியா ஜெகதீஸ்வரக்குருக்கள் | பிறவுண்வீதி யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கு. கதிர்காமநாதன் | தோப்பு அச்சுவேலி | 6000. 00 |
| S. ரங்கநாதன் | கனடா | 1000. 00 |
| செல்வி ரதிவதனி | தம்பசெட்டி | 2000. 00 |
| கா. கணேசலிங்கம் ஆசிரியர் | புலோலி | 3000. 00 |

(தொடரும்....

**அச்சத்தில் எப்போதும் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சிந்திப்பது மேல்.**

உ

# இறப்பை எண்ணி...

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.**

'மரணம் வந்துவிடும்' என எண்ணியதும் நாம் அதற்குப் பயப்படுகின்றோம். ஆனால் இறைவனின் அடியவர்கள் அதற்கு அஞ்சுவதில்லை. நாவுக்கரசர் 'நமனை அஞ்சோம்' என அஞ்சாது நின்றவர் என்பதைச் சென்ற கட்டுரையில் பார்த்தோம்.

சுந்தரமூர்த்தி நாயனார் வேறு வகையில் பாடியுள்ளார். அவர் வாழ்வதற்கு அஞ்சுவதாகக் கூறியுள்ளார். 'இறைகளோடு இசைந்த இன்பம்' எனத் தொடங்கும் பதிகம் முழுவதிலுமே இந்த அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார். முன்னைய கட்டுரை ஒன்றில் பார்த்த 'கால் கொடுத்து எலும்புமூட்டி' என்னும் தேவாரத்தையொத்த தேவாரங்கள் இப்பதிகத்திலும் உள்ளன.

ஊன்மிசை உதிரக் குப்பை
ஒருபொருள் இலாத மாயம்
மான்மறித்து அனைய நோக்கின்
மடந்தைமார் மதிக்கும் இந்த
மானுடப் பிறவி வாழ்வு
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
ஆனல்வெள் ளேற்ற ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே.

என்பது அப்பதிகத்திலுள்ள ஒரு தேவாரம். தசையின்மேல் உதிரமுள்ள உண்மைப் பொருளற்ற பொய்யான உடல். மான்மருண்டு நோக்குவது போன்ற பார்வைகொண்ட பெண்கள் மதிக்கும் இந்த மானுட வாழ்வை வாழும் வாழ்வை வேண்டாது அஞ்சுகின்றார். மாய வாழ்வு வாழத்தான் அவர் பயங்கொண்டார். ஒரு பொருள் உள்ள வாழ்வு வாழ அவர் விரும்பியுள்ளார்.

சொல்லிடில் எல்லை யில்லை
சுவையிலாப் பேதை வாழ்வு
நல்லதோர் கூரை புக்கு
நலமிக அறிந்தேன் அல்லேன்
மல்லிகை மாட நீடு
மருங்கொடு நெருங்கி யெங்கும்
அல்லிவண்டு இயங்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே.

என்பார் மற்றொரு தேவாரத்தில்.

'இந்தச் சுவையற்ற பேதமை நிறைந்த வாழ்வைப் பற்றிச் சொல்லப் புகுந்தால் எல்லையின்றி நீளும். நல்ல கூரையொன்றின் கீழ் வாழ்ந்து அதன் நன்மையை

அறியமுடியாது போய்விட்டது எனப் பாடியுள்ளார். எனவே நல்ல கூரை கிட்டியிருந்தால் அவர் இந்த வாழ்க்கைக்கு அஞ்சியிருக்கமாட்டார்.

உதிரநீர் இறைச்சிக் குப்பை
எடுத்தது மலக்கு கைம்மேல்
வருவதோர் மாயக் கூரை
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்

என இந்த வாழ்வை வேண்டாம் என்று அதற்கு அஞ்சினார். சுந்தரமூர்த்தி நாயனார் இறப்பதற்கு அஞ்சாது வாழ்வதற்கு அஞ்சுவதன் காரணம் அந்த வாழ்வின் தன்மையேயாகும். ஆனால் நாமோ அத்தகைய வாழ்க்கையை வாழ விரும்பித்தான் மரணத்திற்கு அஞ்சுகிறோம்.

சுந்தரர் மற்றொரு தேவாரத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

வலையம் வைத்த கூற்ற மீவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலைஅ மைத்த சிந்தை யாலே
திருவடி தொழுது உய்யின் அல்லால்
கலைஅ மைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவ ருடை
உலைஅ மைத்திங்கு ஒன்ற மாட்டேன்
ஓண காந்தன் தளியு ளீரே.

இத் தேவாரத்தில் கூற்றுவன் அவரிடம் வந்துநிற்கும் வேளையைப் பற்றிக் கூறியுள்ளார். "வானத்தின் மேலே யமன் வந்து நிற்கிறான்" என்று சொல்லியதைக் கேட்டு அவர் மனம் சிந்திக்கின்றது. இவனிடமிருந்து தப்பி இங்கு வாழ வேண்டுமா? கல் போன்ற திண்மையான மனதினால் இறைவனின் திருவடிகளைத் தொழுது உய்தி பெறுவதென்றால் இருக்கலாம். அதைவிட்டு காமம், குரோதம், லோபம், மதம், மாத்சரியம் ஆகிய உலைகளை உள்ளே அமைத்து இங்கு ஒன்றியிருக்க மாட்டேன். இது அவரது மனமெடுத்த முடிபு.

இதிலிருந்து நாமொன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். கூற்றுவனின் பிடியிலே சிக்காது நாம் வாழும் காலத்திலே மாயக்கூரையின் கீழ் சுவையிலாப் பேதை வாழ்வு வாழக்கூடாது. சிலை அமைத்த சிந்தையாலே இறைவனுடைய திருவடிகளைத் தொழுது உய்ய வேண்டும்.

---

**தியானம்**

அமரத்துவத்தையும் அழிவற்ற ஆனந்தத்தையும் அடைவதற்கு தியானம் ஒன்றுதான் மார்க்கம். தியானமானது துயரம் துன்பம் ஆகியவற்றுக்கான காரணங்கள் அனைத்தையும் அழிக்கிறது.

---

**உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதனைப் பின்தொடருங்கள்.**

உ

# தீராப் பிணி

**வாரியார் சுவாமிகள்**

*தீராப் பிணி:*

உலகிலேயே எல்லா உயிர்களுக்கும் எக்காலும் நீங்காது தொல்லைப் படுத்தும் நோய்கள் மூன்று உள. அவைகளால் அல்லற்பட்டு உயிர்கள் உழல்கின்றன. இந்த மூன்று நோய்களினின்றும் தப்பி உய்ந்தவர் மிகச் சிலரே. அந்த நோய்களின் பெயர் யாது? அதனைத் தடுக்க உலகினர் புரியும் செயல்கள் எவை? அவைகளை விலக்கச் செய்ய வேண்டியவை யாவை?

எல்லா உயிர்கட்கும் என்றும் துன்பத்தைத் தரும் அந்நோய்கள், பசி, காமம், பிறவி என அறிக. பசி உடம்பைப் பற்றியது. காமம் உள்ளத்தைப் பற்றியது. பிறவி உயிரைப்பற்றியது.

அந்தோ! பசிநோய் செய்யும் கொடுமைகள்தாம் எத்தனை? எழுத ஏட்டில் அடங்கா; சொல்ல உரையில் அடங்கா.

பசி நோயினால் பீடிக்கப்படாத உயிர்கள் தாம் உலகில் உளவோ? விரத நாளிலும் கூட அப்பசி நோயைத் தாங்காமல் உணவை என்னென்ன உருவில் உட்செலுத்துகின்றனர். பசி நோய் வந்தபோது பத்தும் பறந்துபோகுமாம். மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, முயற்சி, வேட்கை என்ற பத்துக்கும் ஆபத்து வருகிறது பசிப்பிணியால்.

பசி நோயைத் தணிக்கத்தானே உயிர்கள் ஓயாது உழைக்கின்றன. பசிநோய் மிக்கபோது கண்ணொளி மங்குகிறது. கரசரணாதிகள் தடுமாறுகின்றன. ஏனைய கருவிகரணங்கள் தத்தஞ் செயல்களை இழக்கின்றன. நாப் புலர்கின்றது. கோபம் மலர்கின்றது. கொடிய செயல்களில் மனிதன் ஈடுபடுகின்றான். பெற்றதாய் பசியின் கொடுமையால் குழந்தையை விற்றுவிடுகின்றாள். சிலர் உயிரைத் துறக்கின்றனர். சிலர் செயலை மறக்கின்றனர். சிலர் கடலுக்கு அப்பாலும் பறக்கின்றனர். சிலர் கடமைகளை மறக்கின்றனர்.

பசி நோயை அவ்வப்போது உணவு என்ற மருந்தைக் கொடுத்துத் தற்கால சாந்தியாகத் தடுக்கின்றனர். பசிப்பிணியைப் போக்கும் அன்னதானமே எல்லாத் தானத்திலும் உயர்ந்தது என்று கருதினார் சிறுத்தொண்டர். அதனை மேற்கொண்டார் இராமலிங்க அடிகள். அவரது திருவுள்ளம் பசி என்றவுடனே நடுங்குமாம்.

*எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே இலகிய இறைவனே உலகில்*
*பட்டினி யுற்றார் பசித்தனர் களையால் பரதவிக் கின்றனர் என்றே*
*ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம் உளம்பகீர் எனநடுக் குற்றேன்*
*இட்டஇவ் வுலகில் பசியெனில் எந்தாய் என்னுளம் நடுங்குவது இயல்பே*

பசிநோயை மாற்றுவதற்கு மணிமேகலை அரும்பாடுபட்டாள். பசி எல்லா வற்றையும் அழிப்பதனால்தான் திருவள்ளுவர் அதனை "அழிபசி" என்கின்றார்.

*அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி*

பசியைப் பொறுத்துக்கொள்ளுவதே பெரிய ஆற்றலாகும். ஆயினும், அந்த ஆற்றலினும் பெரியது அப்பசியை மாற்றுவார் ஆற்றலாகும்.

***ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை***
***மாற்றுவார் ஆற்றலின் பின்***

என்று அழகாகக் கூறுகின்றார் பொதுமறையாசிரியர்.

இத்தகைய பொல்லாத பசியை முருகவேளுடைய திருநாமங்களை உள்ளங்குழைந்து உருகி உரைத்து மாற்றிவிட்டதாகக் கூறுகிறார் அருணகிரிநாதர்.

***"குகனே குருபர னேஎன நெஞ்சிற்***
***புகழ அருள்கொடு நாவினி லின்பக்***
***குமுனி சிவ அமு தூறுக உந்திப் பசியாறி"***

யாவராலும் மாற்றமுடியாத பசிப்பிணியை மாற்றும் மருந்து திருவேலிறைவன் திருநாமங்கள் என அறிக.

*காமநோய்:*

இக் காமநோயினாற் கலங்காத மனிதர்களோ தேவர்களோ இல்லை. எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களும் இந்நோயினால் இடர்படுகின்றன. ஆனைமேற் பவனிவரும் இந்திரன் இதனால் பூனையாகிப் பதுங்கியோடினான். சந்திரன் உடல் தேய்ந்தான். இராவணன் மாய்ந்தான். தவத்தினின்றும் விசுவாமித்திரன் ஓய்ந்தான். சச்சந்தன் சாய்ந்தான், கீசகன் தீய்ந்தான். கலைகளை ஆய்ந்தாரும், பகைவரைக் காய்ந்தாரும் காமநோயால் வீழ்ந்தார்கள். இதன் வலிமைதான் என்ன? முடி துறந்தான் ஒருவன். தளர்ந்த வயதிலும் இந்நோயினால் இடர்படுகின்றனர் பலர் பழியையும் பாவத்தையும் பாராது பர்தவிக்கின்றனர் பலர். இந்த நோய்க்கு சாந்தியாகவுள்ள நன்மருந்து தருமபத்தினி. அவளுடன் அமையாது, புன்மருந்தை நாடி இரவு பகலாக ஏக்குற்று, பார்த்தவர் பரிகசிக்க பொன்னையும் பொருளையும் அள்ளிக்கொடுத்து சன்மார்க்கத்தில் கிள்ளிக் கொடுக்காமல் மீளா நரகிற்கு ஆளாகின்றனர்.

***உடம்பினால் ஆயபயன் எல்லாம் உடம்பினில் வாழ்***
***உத்தமனைக் காணும் பொருட்டு.***

என்பதனை அறியாமல் உடம்பையும் பாழ்படுத்துகின்றனர். காமநோயினால் நகுஷன் விண்ணிழந்தான். அசமஞ்சன் மண்ணிழந்தான். காகாசுரன் கண்ணிழந்தான்.

இந்நோயை அறவே அகற்றினார் உளரோ? உளர். வீடுமரும், அனுமரும், குமரகுருபரரும், சிவப்பிரகாசரும், யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரும் என்க.

அருணகிரிநாதர் இக்காமநோயைக் கடிந்தனர். அவருடைய திருப்பாடல் சான்று பகர்கிறது. முருகனுடைய திருவடித் தியானமே காமநோய்க்கு நன் மருந்து என உணர்க.

*கடத்திற் குறத்திப் பிரானரு ளால்கலங் காதசித்தத்*
*திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்*
*படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்*
*தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.*

*பிறவிப்பிணி:*

இந்நோய்தான் மிகக் கொடியது. இறைவன் என்றோ அன்றே நாமுண்டு. அன்றுதொட்டு இன்றுவரை பிறவிநோய் தொடர்ந்து நம்மை வாட்டுகிறது. பிறவிநோயை மாற்றும் பொருட்டு நம் நாட்டில் அறிஞர்கள் எத்தனையோ முயற்சிகள் செய்தனர். கானகஞ் சென்றனர்; கனலில் நின்றனர்; புனலில் மூழ்கினர்; புல்லைத் தின்றனர்; புலன்களை வென்றனர்; தனத்தை வெறுத்தனர்; மனத்தை ஒறுத்தனர்; உடம்பை வறுத்தனர்.

*பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு*

என்பது பொய்யாமொழி. செய்யாமொழியிலும் இத்துணைத் தெளிவாகக் கூறவில்லை. செம்பொருள் என்பது யாது? அதுதான் முருகனுடைய திருவடி. அது சிறந்த வடிவுடையது. ஏனைய தேவர்களது பாதமும் சிவப்பாக இருந்தாலும் அத்தேவர்கள் செத்துப் பிறந்தவர்கள். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்", "கையோ அயிலோ கழலோ முழுதும் செய்யோய்", "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள" என்ற அருள் வாக்குகளை உன்னி உணர்க. செவ்வானுருவில் திகழ்வேலவனுடைய சிவந்த திருவடியே பிறவிநோய்க்கு மருந்து எனத் தெளிக. அத்திருவடி அருணகிரிநாதரைப் பிறவிப் பெருங் கடலினின்றுங் கரையேற்றியது.

*"அநுபவ சித்த பவக்கட லிற்பு காதெனை*
*வினவியெ டுத்தருள் வைத்த கழற்க்ரு பாகரன்"*
*"உறவுமுறை மனைவிமக வெனுமலையில் எனதிதய*
*உருவுடைய மலினபவ சலராசி ஏறவிடும்.*
*உறுதுணையும்"*

*-திருவகுப்பு-*

எனவே, முருகவேளின் திருநாமத் துதியினால் உடற்பிணியாகிய பசியையும், திருவடித் தியானத்தினால் உள்ளப்பிணியாகிய காமப் பிணியையும், திருவடி ஞானத்தினால் உயிர்ப்பிணியாகிய பிறவிப்பிணியையும் மாற்றுதல் வேண்டும்.

---

எந்தச் சாதனைக்கும் தடங்கல்கள் மனதை உடையவைக்கும். எதிர்ப்பு எங்கே இல்லையோ அங்கு வெற்றி இல்லை. எனவே அறிவை விரிவாக்கி அன்பைப் பலமாக்குங்கள். எதிர்ப்புக்களை வெற்றியாக்குங்கள்.

---

**மனிதர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்களே.**

உ

# "நா" காக்க

**திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.**

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, தனு, கரண, புவன போகங் களைப் படைத்துத் தந்துள்ளார். இவை அனைத்தும் நல்ல காரியங்களைச் செய் வதற்கும், கடவுளை வணங்கி முத்தியின் பம் பெறுவதற்கும் எமக்குப் பேருதவியாக உள்ளன. இவற்றை நல்லவழியிலேயே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. எமக்கு ஐந்து புலன் கள் உண்டு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும் ஐம்பொறி களுடன் தொடர்புபட்டவை. பொதுவில் இவை மனிதனுக்கு அடங்கியிருக்க வேண்டியவை. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, இவை மனிதன் மீது மேலாண்மை செலுத்தி, அவனை ஆட்டிப்படைக்கின்றன. இதனால் மனிதன் தன்னியல்பை இழந்து, ஆசைகளைப் பெருக்கி, வாழ்க்கையில் அல்லற்பட வேண்டியுள்ளது. புலன்களின் செல் வாக்கினைத் தளர்த்தி, அவற்றினை எவன் ஒருவன் தனது ஆட்சிக்குள் கொண்டு வருகின்றானோ, அவனே பெரியவன், மேலானவன் ஆகின்றான். இதற்கு நல் லறிவு தேவை. ஐந்தவித்தான் ஆற்றல் மிகப்பெரிது. செயற்கரிய செய்த பெருமை யும் கிடைக்கின்றது. இந்த வகையில் இன்று சுவையோடு சம்பந்தப்பட்ட வாய் எனும் பொறி பற்றிச் சிறிது நோக்குவோம்.

வாய் என்பதன் முக்கிய அங்கம் நாக்கு ஆகும். நாக்கு, சுவைத்தல், வழங் குதல் ஆகிய இரண்டு முக்கிய தொழில் களைச் செய்கின்றது. பொருட்களின் அறு சுவைகளையும் உணர்ந்து அறிவிப்பது நாக்கு. நாக்கின் அடுத்த தொழிற்பாடு ஒலியுடன் தொடர்புடையது. ஒலிதான் முதலில் தோன்றியது என்பர். மனிதனும் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கிறான். இந்த ஒலியைப் பயன்படுத்தி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களை யும் பிறருக்கு வழங்குகின்றான்; அதாவது அவற்றை வெளிப்படுத்துகிறான். இதுவே நாவின் வழங்கல் தொழிற்பாடு. வழங்கல் என்பது தானம் செய்தல் ஆகும். தானம் தர்ம வழியில், தர்ம முறையில் செய்யப் படவேண்டியது அவசியம். பாத்திரம் அறிந்து தானம் வழங்கப்பட வேண்டும். வேண்டாதன தவிர்த்து, வேண்டப்படுவன மாத்திரம் கொடுக்கப்பட வேண்டியது நீதி யாகும். இந்தவகையில் வாயிலிருந்து வெளிப்படும் வாக்கு அல்லது சொல் ஒளி பொருந்தியதாக விளங்கவேண்டும். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டா யின், வாக்கினிலே ஒளியுண்டாகும்" என் கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே உண்டாகும் ஒளி வாய்மை எனப்படும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

மற்றையோருக்கு ஒரு சிறிதும் தீமையை விளைவிக்காத சொற்களைச் சொல்லுகின்ற அறம், வாய்மையாகும். அப்பர் பெருமான் "வாயே வாழ்த்து

நன்மையைப் பத்துப்பேர் விரும்பினால் உண்மையை ஒருவன் விரும்புகிறான்.

கண்டாய்" என்று நாவுக்கு பணிப்புரை வழங்குகிறார். நாவினை ஆண்டு, அவர் நாவுக்கரசர் ஆனார். வாழ்த்துவதற்குத்தான் வாயைப் பயன்படுத்த வேண்டுமே தவிரப் பிறரைத் தூற்றுவதற்கோ, துன்புறுத்து வதற்கோ அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மனிதனின் அற்புத சாதனையாக மொழிப்பயன்பாடு விளங்குகின்றது. மொழி யின் ஒலி வடிவம் உருப்பெறுவது மனிதனின் நாக்கில் ஆகும். எனவே, நாக்கு நன்கு கண்காணிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இதற்கு இறைவனே வழிஅமைத்துக் காட்டியுள்ளான். இறை வன் நாவினைப் படைக்கும் போதே, அது செய்யப்போகின்ற செயலை உணர்ந்து, முன்னேற்பாடாக, அதனை வாய் எனும் அரன் ஒன்றினுள் அமர்த்தி, அதனைச் சூழக் கூரிய பற்களால் வேலிபோட்டுக் கடுமையான காவலுக்குட்படுத்தியுள் ளான். நாக்கு என்ற அருமையான உறுப்பு, அது வழங்கும் சொற்களினால் ஆக்கத் தையும் தருவிக்க முடியும், கேட்டினை யும் வருவிக்க முடியும். ஆகையால் நா காத்து ஓம்பப்பட வேண்டியது என்பது இறைவனின் சித்தமும் ஆகும் என்ப தனையே இந்தக் கட்டுக்காவல் உணர்த்து கின்றது.

"யாகாவா ராயினும் நா காக்க" என்றார் வள்ளுவர்.

மனம், வாக்கு, காயம் என்ப வற்றினால் அறம் செய்யமுடியும். இவற் றுள் வாக்கு என்பதனால் செய்யப்படுகின்ற அறத்திற்குப் பெரும் பொருட்செலவும் தேவையில்லை. உண்மை பேசுதல், இன் சொற்களால் இனியவை கூறல், வாழ்த் துரை வழங்குதல், வார்த்தைகளின் வகை யறிந்தும், சொற்களின் திறனறிந்தும் பேசுதல், பயனுள்ளவற்றைப் பேசுதல், சமாதானப் பேச்சுக்கள் என்பன சிறந்த அறம் தழுவிய செயல்கள் ஆகும். இதே வேளை எதிர்மறையான, குற்றங்கள் சார்ந்தவற்றில் நாக்கு ஈடுபாடு கொள்ளா திருத்தலும் அறமாகின்றது. புறங்கூறாமை, வஞ்சினம் பேசாமை, கடுஞ்சொற் கூறாமை, பொய் பேசாமை, விதண்டா வாதம் புரியாமை, சூளுரையாமை, சபதம் செய்யாமை, சாபம் இடாமை, கோழ் மூட்டாமை போன்றவற்றைக் கடைப்பிடிப் பதன் மூலம் நா காத்தோம்பப்படுகிறது. பெரும் பொருட்செலவுசெய்து புரியும் ஈகையை விட, அன்புடன் முகம் மலர்ந்து பிறர்க்கு இன் சொல் வழங்குவதன் மூலம் புரியும் ஈகை மிகச்சிறந்தது. இது செல வில்லாத, எல்லோருக்கும் இயலக்கூடிய அறம், தருமம், புண்ணியம் ஆகின்றது. இதனாலேயே திருமூலரும், "யாவர்க்கு மாம் இன்னுரை தானே'' என்றார்; பாரதியாரும் "அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்" என்றார். இனிய உளவாக இன்னாத கூறல் தேவையற்றது.

எனவே குடும்பத்திலும் சரி, வேலைத்தலத்திலும் சரி, மற்றும் சமுகத் திலும்சரி, இன்முகத்துடன் யாவருடனும் இனிய சொற்களையே பேசி, அன்பினைச் சொரிந்து, மக்கட் பண்பினைப்பேணி, அறம் பரப்பி எல்லோரும் இன்புற்று வாழ வழி செய்வோம்.

"நாவினுக் கருங்கலம் நமசிவாயவே"

கல்விக்குப் பயன் அறிவு. அறிவுக்குப் பயன் பணிதல் எனும் ஒழுக்கம் என்பதை நாம் சிந்தையில் நிறுத்துவோமாக.



உ

# சந்நிதியான்

**திரு ந. அரியரத்தினம் அவர்கள்**



1985ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாள். கதிரவன் கிழக்கே உதித்து தனது ஒளிக்கதிர்களை பரப்பியவாறு மெது மெதுவாக மேலே கிழம்பிக்கொண்டிருக் கின்றான். விவசாயக் கிராமமான கிளி நொச்சிக் கிராமத்தில் உள்ள மக்களும் கதிரவனை வரவேற்றவாறு மனநிறைவுடன் தங்கள் பொங்கற் செயற்பாடுகளில் ஈடு பட்டுக்கொண்டிருக்கின்றனர். அங்கே A9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் 3ஆம் வாய்க்கால் றோட்டில் அமைந்துள்ள லிங்கம் ஸ்ரோர்ஸ் என்ற அந்த பலசரக்குக் கடையிலும் பொங்கற் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பிள்ளையார் பிடிப்பது முதல் என்னென்ன சடங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமோ அத்தகைய சடங்குகள் எல்லாம் கடைப் பிடிக்கப்பட்டு அந்தப் பொங்கற் செயற்பாடு இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

கடை உரிமையாளரான திரு மு. லோகநாதன் அவர்களும் அவரது பங்காளரான திரு க. மகாலிங்கம் அவர் களும் பொங்கல் வேலைகளில் நேரடியாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். அதேநேரம் உரிய சடங்குகள் பின்பற்றப்பட்டு சரியான ஒழுங்குமுறையில் பொங்கற் செயற்பாடு நடைபெறுவதை அந்தச் சாமியார் அங்கே கவனமாக அவதானித்துக் கொண்டிருக் கிறார்கள்.

3ஆம் வாய்க்கால் றோட்டில் அமைந்துள்ள அந்தப் பலசரக்குக் கடை யில் இடம்பெற்ற பொங்கற் செயற்பாடுகள் நிறைவடைந்துவிட்டது. அடுத்த கட்டமாக பொங்கலைப் படைப்பதற்குரிய ஆயத் தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்பொழுது அங்கே அவர்களை வழிப் படுத்திக் கொண்டிருந்த அந்தச் சாமியார் பொங்கல்ப் பானையை பொங்கல் செயற் பாடு இடம்பெற்ற அந்தக்கடை வாசலில் இறக்கி வைக்கவேண்டாம் எனவும் அதனைக் கடைக்குள்ளே இறக்கி வைக்குமாறும் கடை உரிமையாளர் திரு மு. லோகநாதனிடம் கேட்டுக்கொண்டார்கள்.

ஏன் இவ்வாறு கூறப்படுகிறது என விளங்காது குழப்பத்துடன் திரு மு. லோக நாதன் செயற்படுவதைச் சாமியார் புரிந்து கொண்டார்கள். இதனால் சாமியார் லோக நாதனை நோக்கி "இது சூரியனுக்கு மட்டும் படைப்பதற்குரிய பொங்கல் அல்ல. உனது கடைக்குத்தான் படைக்க வேண் டிய பொங்கல்" எனக் குறிப்பிட்டார்கள். இவ்வாறு அன்றைய தைப்பொங்கல் நாள் கடைக்குள்ளே பொங்கலைப் படைப் பதற்குச் சாமியார் அவர்களை வழிப்படுத் திக் கொண்டிருந்தார்கள்.

சாமியார் குறிப்பிட்டதுபோல பொங்கல்ப் பானையை கடைக்கு உள்ளே கொண்டுவந்து இறக்கி வைத்த கடை உரிமையாளர் லோகநாதனிடம் அந்தக்

**அதிகமான எதிர்பார்ப்பு நிச்சயம் கைகூடப் போவதில்லை.**

கடையின் நடுப்பகுதியில் ஓம் என்ற எழுத்தினை சுண்ணாம்பினால் எழுதுமாறும் சாமியார் கேட்டுக்கொண்டார்கள். இவ்வாறு அங்கே சுண்ணாம்பினால் அந்த ஓம் என்ற எழுத்து எழுதப்பட்டதைத் தொடர்ந்து சாமியார் வாழையிலையில் பொங்கலை இட்டு அந்தப் படையற் செயற்பாட்டை பக்திபூர்வமாகத் தானே மேற்கொண்டு நடாத்தினார்கள்.

வத்திக்குச்சி கொழுத்தி சாம்பிராணி வாசனையும் கமழ விடப்பட்டு தீபாராதனை இடம்பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்யப்பட்டன. அதற்குமுன் படையற்செயற்பாட்டின் முக்கிய அங்கமாக அந்தப் படையற் செயற்பாட்டை ஆண்டவனுக்குச் சமர்ப்பணம் செய்வதற்கு அறிகுறியாக சாமியாரால் தேங்காய் உடைக்கப்பட்டது. ஆனால் உடைக்கப்பட்ட அந்தத் தேங்காயோ பூசைச் செயற்பாட்டிற்கு பொருத்தமற்ற தேங்காயாக அமைந்துவிட்டது. ஆம்! அது அழுகிய தேங்காயாக அமைந்திருந்ததால் அங்கே ஒரு சோக உணர்வு நிலவியது.

தனக்கு நீண்டநாட்களாக நிலவி வருகின்ற கஷ்டநிலைமைகள் எல்லாம் நீங்கவேண்டுமென்பதற்காகவே கடை உரிமையாளர் திரு லோகநாதன் அவர்கள் சாமியார் மூலம் இந்தப் பொங்கற் செயற்பாட்டை மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்கள். பொங்கலுக்கு முதல்நாளே கனகாம்பிகைக் குளத்திற்குச் சென்று அங்கே தனது மைத்துனர் பரமலிங்கத்தின் வீட்டில் தங்கியிருந்த சாமியாரை அழைத்து வந்திருந்தார்கள். அங்கே தமது கடைக்குப் பின்புறமாக கடையுடன் இணைந்திருக்கின்ற அந்த அறையில் சாமியாரையும் தங்களுடன் தங்கவைத்து இந்தப் பொங்கற் செயற்பாட்டை நம்பிக்கையுடன் திரு லோகநாதன் அவர்கள் நடத்திக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு எல்லாம் நிறைவாக நடைபெறவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்த நிலையில் உடைக்கப்பட்ட தேங்காய் அழுகிய தேங்காயாக அமைந்துவிட்டமை கடை உரிமையாளர் திரு லோகநாதனுக்கு மிகுந்த கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

படையற்செயற்பாட்டை நடாத்திக் கொண்டிருந்த சாமியார் உடைக்கப்பட்ட தேங்காய் அழுகிய தேங்காயாக அமைந்துவிட்டதை உணர்ந்து கொண்டாலும், அது தொடர்பாக அப்பொழுது பெரிதாக உணர்வுகள் எதையும் வெளிப்படுத்தவில்லை. கடை உரிமையாளரிடம் நீ தந்த தேங்காய் அழுகிய தேங்காயாக அமைந்துவிட்டது எனக்கூறி இன்னொரு தேங்காயை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். அவ்வாறு தேங்காயை வாங்கிக்கொண்ட சாமியார் கடை முதலாளி லோகநாதனை நோக்கி "இப்பொழுது பார் இதனை விளக்கு மாதிரி உடைக்கின்றேன்" எனக்கூறி அந்தத் தேங்காயுடன் கடை வாசலுக்குச் சென்றார்கள். அங்கே பொங்கல் பொங்குவதற்கு பயன்படுத்திய அடுப்புக் கல்லில் அந்தத் தேங்காயை உடைத்தார்கள். என்ன ஆச்சரியம்! அந்தத் தேங்காய் சரிபாதியாக உடைந்த அதேநேரம் அதில் ஒரு பாதியில் திரி வைத்து விளக்கு ஏற்றுவதற்கு ஏற்ற மாதிரியாக ஒரு விளிம்பும் இடம் பெற்றிருந்தது. சாமியார் அந்தப் பாதித் தேங்காயில் எண்ணெய் விட்டு விளக்கு ஏற்றி சூரியனுக்கு

**பேராசை முடிகிற இடத்தில் மகிழ்ச்சி தொடர்கிறது.**

தீபாராதனை மேற் கொண்டார்கள். அதன்பின் படையல் இடம்பெற்ற இடத்திற்கும் கொண்டுசென்று அங்கேயும் அந்தத் தேங்காய் விளக் கினால் தீபாராதனை செய்தார்கள். இறுதி யாக கற்பூர தீபாராதனையும் மேற்கொண்டு சாமியார் அந்தப் படையலை நிறைவு செய்தார்கள்.

படையற் செயற்பாட்டைத் தொடர்ந்து இருவருக்கும் சாமியார் திருநீறு வழங்கி ஆசீர்வாதம் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து திரு லோகநாதனுடன் சாமி யார் இயல்பாக உரையாடிக் கொண்டிருக் கும்பொழுது, கதையோடு கதையாக "பொங்கல் செயற்பாடு ஒருமாதிரி முடி வடைந்துவிட்டது. தற்செயலாக அசம்பா விதங்கள் ஏதும் நடந்தாலும், நாங்கள் படையற்செயற்பாடு நடாத்திய அந்த இடத் திற்குப் பின்னால் உள்ள கடைப்பகுதி தன்னும் மிஞ்சும்தானே" என்று திரு லோகநாதனைப் பார்த்து குறிப்பிட்டார்கள்.

உடைத்த தேங்காய் பழுதடைந் திருந்ததால் லோகநாதன் கலக்கமடைந் திருந்தாலும் சாமியார் முன்னின்று காரியங் களை நடத்துவதால் அந்தக் கவலையி லிருந்து விடுபட்டு ஓரளவு நிறைவான மனநிலையாய் காணப்பட்டார்கள். ஆனால் தற்பொழுது சாமியார் கூறிய மேற்படி கூற்றினை அவர் ஏன் கூறுகின்றார் என்று விளங்கிக்கொள்ள முடியாத குழப்பநிலை அவருக்கு ஏற்பட்டது.

இவ்வாறு பொங்கல் தொடர்பான எல்லாக் காரியங்களும் அங்கே நிறை வடைந்துவிட்டது. இப்பொழுது நேரம் காலை 8.00 மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. கடை உரிமையாளர் லோகநாதன் அவர்கள் சாமியாரை அவர் தங்கியிருந்த கனகாம்பிகைக் குளத்தில் உள்ள பரமலிங்கத்தின் வீட்டிற்குக் கொண்டு சென்று விடுவதற்கு ஆயத்த மாகிக் கொண்டிருந்தார். அப்பொழுது சாமியார் அவரிடம் நீ இங்கே தங்கிநின்று உன்னுடைய அலுவல்களைக் கவனி நான் மகாலிங்கத்துடன் போகின்றேன் எனக் குறிப்பிட்டார்கள். இதற்கிணங்க லோகநாதன் அவர்கள் சாமியாரை மகாலிங்கத்துடன் மோட்டார் சைக்கிளில் அனுப்புவதற்குரிய ஒழுங்கினை மேற் கொண்டார்கள்.

அப்பொழுது அங்கிருந்து புறப் படுவதற்கு ஆயத்தமான சாமியார் கடை உரிமையாளர் திரு லோகநாதனைப் பார்த்து தனது வழமையான புன்சிரிப்புடன் "உனக்கு றோட்டால் போகின்ற குடிகாரர் அடிச்சாலும் நீ கையைக் கட்டிக்கொண்டு அடியை வாங்கத்தான் வேணும்" என்று பகிடிபோலக் கூறியவாறு நான் போய்விட்டு வாறன் என்று விடைபெற்று இயல்பாக நடக்க ஆரம்பித்தவர் மனதில் ஏதோ யோசித்தவாறு மீண்டும் திரும்பி லோக நாதனை நோக்கி "நான் இங்கே செருப்பு, குடை அப்படி ஏதும் சாமான்களை மறந்து போய் விட்டுச்சென்றால் மட்டும் அவற்றை தேவை என்றால் கொண்டுவந்து தா. இதைவிட வேறு ஏதும் சாமான்கள் என் றால் அவை இங்கேயே இருக்கட்டும்" என்று கூறிவிட்டு ஒழுங்குசெய்யப்பட்ட அந்த மோட்டார் சைக்கிளில் ஏறித் தனது இருப்பிடம் நோக்கி செல்லலானார்கள்.

சாமியார் சென்றபின் லோகநாதன் அவர்கள் கடைக்குள் சென்று படையற் செயற்பாட்டிற்காக ஒழுங்கீனமாகப் போயிருந்த சில பொருட்களை மீள் ஒழுங்கு செய்கின்ற செயற்பாட்டில்

**கற்பனை வளமில்லாத மனிதன் இறக்கையில்லாத பறவைபோன்றவன்.**

ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சாமியாரை இறக்கிவிடுவதற்காகச் சென்றிருந்த மகாலிங்கமும் திரும்பிவந்து சேர்ந்துவிட்டார்கள். இந்தநிலையில் மகாலிங்கம் கடைக்குப் பின்புறம் தாங்கள் தங்குகின்ற அந்த அறைக்குள் ஏதோ பொருளை எடுப்பதற்காகச் சென்றபொழுது அங்கே அந்த அறையில் உள்ள கட்டிலின் ஒரு மூலையில் சாமியாருடைய அந்தப் புனிதமான திருநீற்றுப்பை இருப்பதைக் கண்டு கொண்டார்கள். சாமியார் மறந்துபோய் விட்டுச் சென்றாலும் இது எந்தநேரமும் அவருக்கு அவசியமான ஒன்று என்பதை உணர்ந்துகொண்ட மகாலிங்கம் உடனடியாகவே செயற்பட ஆரம்பித்தார்கள்.

கடைக்குள் இருக்கும் லோகநாதனிடம் சென்று விடயத்தைக்கூறிய மகாலிங்கம் உடனே சென்று அந்தத் திருநீற்றுப்பையை சாமியாரிடம் கொடுத்துவிட்டு வருவதற்கு ஆயத்தமானார். மகாலிங்கத்தினுடைய செயற்பாடு சரியானதுதான் என்பதை லோகநாதன் உணர்ந்துகொண்டாலும் சாமியார் கடையில் இருந்து புறப்படுகின்ற பொழுது தனக்குக் கூறிய வார்த்தைகள் அவரிற்கு ஞாபகத்திற்கு வந்தது. ஆம் "செருப்பு, குடை அப்படி எதையும் நான் மறந்துபோய்விட்டுச் சென்றால் மட்டும் திருப்பித்தரவும். வேறு எது என்றாலும் அது இங்கேயே இருக்கட்டும்" என்று கூறியதை ஒருமுறை யோசித்த லோகநாதன் அவர்கள் மகாலிங்கத்தை நோக்கி அதை எடுத்துச் செல்ல வேண்டாம். அந்தத் திருநீற்றுப்பை இங்கேயே இருக்கட்டும் எனக்கூறிக்கொண்டார்கள். இவ்வாறு கூறிய லோகநாதன் அந்தத் திருநீற்றுப் பையினை எடுத்து அலுமாரிக்குள் பாதுகாப்பாக வைத்தவாறு ஏதோ எல்லாம் கனவுபோல நடக்கின்றனவே என தனது மனதிற்குள் யோசித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு இவர்களது தைப்பொங்கற் செயற்பாடுகள் காலை 8.45 மணியளவில் முழுமையாக நிறைவுபெற்றுவிட்டது. மேலும் அன்று தைப்பொங்கல் நாள் என்பதால் தமது வியாபார ஸ்தாபனத்தை மதிய நேரம்வரை திறந்து செயற்படுவதற்கு முடிபு செய்தனர். இவ்வாறு கடையைத் திறப்பதற்காக கடை உரிமையாளர்களான லோகநாதன் அவர்களும், மகாலிங்கம் அவர்களும் மற்றும் அவர்களுக்கு உதவியாக இருந்த சிறுவனும் கடைக்குள்ளே ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

ஆம்! அப்பொழுதுதான் திடீரென அங்கே ஒன்றன்பின் ஒன்றாக அந்தப் பயங்கரமான சம்பவங்கள் இடம்பெற்றன. ஏதோ அசம்பாவிதங்கள் வெளியே நடக்கின்றனவோ என இவர்கள் சிந்திப்பதற்கு முன்பாகவே கடகடவென ஓடிவந்த அந்த விஷேட அதிரடிப்படை பொலிசார் நீட்டிய துவக்குகளுடன் இவர்களது கடை வாசலுக்கே வந்துவிட்டனர். அதுமட்டுமல்ல கடைக்குள்ளே புகுந்த அந்த அதிரடிப்படையினர் இவர்களது நெஞ்சுக்குநேரே துவக்குகளை நீட்டியவாறு இருவரையும் கடைக்கு வெளியே இழுத்துச் சென்றனர்.

என்ன பரிதாபம் மகிழ்ச்சியும் குதூகலமும் நிலவிய அந்தப் பகுதி பயங்கரமான பகுதியாக மாறியது. அந்தப் பகுதி மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு எங்கும் சிதறி ஓடத்தொடங்கினர். எங்கும் அவலக்குரல்கள் கேட்கத் தொடங்கியது.

(தொடரும்....

**நாகரீகம் என்பது மனப் பண்பாட்டையே குறிக்கும்.**

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# தில்லை - சிதம்பரம்

## திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

கோயில் என்றாலே அது சிதம் பரத்தையே குறிக்கும். ஊரின் பெயர் "தில்லை". கோயிலின் பெயர் "சிதம் பரம்". இன்று ஊரின் பெயர் மறைந்து கோயிலின் பெயரே ஊரின் பெயராக மாறிவிட்டது. சிதம்பரத்துக்கு "தில்லைவனம்" என்ற பெயருமுண்டு. வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) துதித்ததனால் இது "பெரும் பற்றப்புலியூர்" எனவும் வழங்கப்படுகிறது. சித்+ அம்பரம்= சிதம்பரம். சித்- அறிவு. அம்பரம்- வெட்டவெளி. அதனால் பஞ்சபூத ஸ்தலங்களுள் "ஆகாய" ஸ்தலம்.

சிற்றம்பலத்தில் தெற்கு முகமாக, ஆனந்த தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமான் ஐந்தொழில்களையும் அனுட்டித்து நிற்கின்ற ஆனந்த சொருபியாக விளங்குகிறார். இவரே கருவறையின் மூலவர். நடராஜப் பெருமானின் வலதுகரம் காத்தலையும், உடுக்கை படைத்தலையும், தீச்சுடர் அழித்தலையும், தூக்கிய திருவடி அருளலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும் குறிக்கும். இடதுபக்கம் "சிவகாமி அம்மை" எப்போதும் ஆனந்தத் தாண்டவத்தை பார்த்தபடியே உள்ளார்.

கோயில் ஐந்து சபைகளைக் கொண்டது. 1. சிற்றம்பலம் 2. பொன்னம்பலம் 3. பேரம்பலம் 4. நிருத்தசபை 5. ராஜசபை என்பவையே அவையாகும்.

### 1. சிற்றம்பலம்:

நடராஜப்பெருமான் திருநடனம் புரியும் கருவறையே சிற்றம்பலம் ஆகும். பொன் ஓடுகளால் வேயப்பட்ட இந்தச் சிற்றம்பலத்தினுள்ளே செல்ல பஞ்சாட்கரப் படிகள் எனப்படுகின்ற ஐந்து படிகள் உள்ளன. இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாத்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படியிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் அச்சாத்திர நூலையெடுத்து நடராஜப் பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்த நூலுக்கு "திருக்களிற்றுப்படியார்" என்று பெயர் ஏற்பட்டது. இந்தப் பஞ்சாட்கரப் படியில் ஏறித்தான் மாணிக்கவாசகரும் நந்தனாரும் நடராஜப்பெருமான் திருவடியை சென்று சேர்ந்தனர். பெருமானின் வலதுபக்கமாக "சிதம்பர ரகசியம்" உள்ளது. திரைவிலகி தீபாராதனை நடைபெறும் வேளையில் உள்ளே தங்க வில்வ மாலைகளை மட்டுமே காணலாம்.

### 2. பொன்னம்பலம் எனப்படுகின்ற கனகசபை:

சிற்றம்பலத்துக்கு முன்னால் உள்ள இப்பகுதியிலேயே ஸ்படிகலிங்கத்திற்கு நாடோறும் அபிஷேகமும், ஆறுகால பூசைகளும் நடைபெறுகின்றன. இந்தப் பொன்னம்பலமும் பொன் தகடுகளால் வேயப்பட்டுள்ளது. பதஞ்சலி, வியாக்கிர பாதருக்கு பெருமான் நடனக்காட்சியை அருளிய இடம் இந்த மண்டபமே.

**3. பேரம்பலம்:**

இது தேவசபை எனப்படுகிறது. பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளும் நூற்றுக்கால் மண்டபம் கொண்ட இந்த பேரம்பலமானது இரண்டாம் பிரகாரத்தில் உள்ளது.

**4. நிருத்தசபை:**

நடராஜப் பெருமானின் கொடிமரத்துக்கு தென்பால் உள்ளது. ஊர்த்துவ தாண்டவம் நடைபெற்ற இடம். அப்பெருமானின் திருமேனி இங்குள்ளது.

**5. ராஜசபை:**

இது ஆயிரம் கால்கள் கொண்ட பெருமண்டபமாகும். சோழமன்னர் மரபில் முடிசூடப் பெறுபவர்களுக்கு பஞ்சாட்கரப் படியில் அபிஷேகமும், இம் மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நடைபெற்று வந்தன. இராஜராஜன் வேண்டுதலின் பேரில், நம்பியாண்டார் நம்பிகளால் பொல்லாப்பிள்ளையாரின் துணைகொண்டு திருமுறைப்பதிகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை சேக்கிழாரால் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு, ''பெரியபுராணம்'' அரங்கேற்றம் இந்த ஆயிரங்கால் மண்டபத்திலேதான் நடைபெற்றது.

தில்லையில் நடந்தேறிய அற்புதங்கள் பலப்பல:

1. மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்தமை.
2. உமாபதிசிவம் "கொடிக்கவி" பாடி ஏறாது நின்ற கொடியை ஏற வைத்தமை.
3. வியாக்கிரபாதரின் குழந்தை பாலுக்காக அழுதபோது, இறைவன் பாற்கடலையே வரவழைத்தமை.
4. சேக்கிழார் பெரியபுராணம் பாட "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தமை.
5. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் ஒரே இரவில் இறைவனே சுவடிகளில் எழுதிக் கொடுத்தமை.
6. முத்துத் தாண்டவருக்கு தினமும் ஒரு பாடலுக்கு ஒரு காசு கிடைக்கப்பெற்றமை.
7. நந்தனார், முத்துத்தாண்டவர் இறைவனோடு கலந்தமை.
8. தடைப்பட்டு நின்ற தேரை, சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி ஓடச் செய்தமை. ஆகிய இவைகள் சிலவாகும்.

நடராஜப் பெருமானை நின்று தரிசிக்கும் முன் மண்டபத்தின் இடது பக்கம் கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி உள்ளது. இங்கே பெருமாள் படுத்திருந்த கோலத்தில் காட்சி தருகிறார்.

மூன்றாம் பிரகாரத்தில் இறைவன் லிங்கவடிவில் அருள்பாலிக்கும் "திருமூலட்டானம்" என்னும் தனிக்கோயில் காணப்படுகிறது.

நான்கு கோபுரவாசல் வழியாகவும் நால்வரும் திருக்கோயில் உள்ளே சென்று வழிபட்டனர். வடக்கு- சுந்தரர், கிழக்கு- மாணிக்கவாசகர், தெற்கு- ஞானசம்பந்தர்,

*தீமைகள் செய்து வாழ்பவர்கள் கலக்கமின்றி வாழ முடியாது.*

மேற்கு- அப்பர். ஞானசம்பந்தர் கோபுர வாயில் என்று அழைக்கப்படுகின்ற தெற்கு வாசலே கோயிலின் பிரதான வாசலாகும்.

வருடத்தில் இருமுறை, ஆனி திருமஞ்சனம்- மார்கழி திருவாதிரை ஆருத்திரா தரிசன விழாவின்போது மட்டுமே சிற்றம்பலத்திலிருந்து நடராஜப் பெருமான் வெளியேவந்து தேரேறி நான்கு வீதிகளிலும் பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

தில்லையாடியின் திருவடி - ஆட எடுத்திட்ட பாதம்- குஞ்சிதபாதம் நம் குறைகளைப் போக்கி, நிறைவையும் வாழ்வையும் தருமே!

*பி.கு:* தமிழகத்தின் எல்லா நகரங்களிலிருந்தும் கோயிலுக்கு நேரடியான பேருந்து வசதி உண்டு.

செவ்வநெடு மாடம் சென்று சேணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

-சம்பந்தர்-

## "கலியுகவரதன்" இந்து மன்றம்

யாழ் மாநகராட்சி மன்றத்தின் ஒரு பகுதியான நீர்வேலைப்பகுதி உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் முயற்சியால் "கலியுகவரதன்" இந்து மன்றம் எனும் அமைப்பானது உருவாக நல்லூர் முருகன் அருள்பாலித்துள்ளான். இம்மன்றத்தின் முக்கிய செயற்பாடானது நல்லூர் முருகனின் வருடாந்த மகோற்சவத் தின்போது வரும் அடியார்களுக்கு தாகசாந்தி செய்தலும் அன்னமளிப்பதுமாகும்.

இச்செயற்பாட்டினை 2005ஆம் ஆண்டு முதல் தேர்த்திருவிழா அன்று நீர்வேலைப்பகுதி அலுவலகமான இந்துவிடுதியில் அன்னதான நிகழ்வை இம்மன்றம் மேற்கொண்டு வருகிறது. 2008 ஆவணிமுதல் பரிபாலன சபையை அமைத்து பதிவுசெய்யப்பட்டு மேலும் சிறப்பாக சமயப்பணிகளை மேற்கொள்வதற்கு "கலியுக வரதன்" இந்துமன்றம் தோன்றியுள்ளது. நீங்களும் உங்கள் பங்களிப்பை ஆற்றுவதன் மூலம் இச்சபை வளர முருகன் துணைபுரிவான்.

**சபையின் கணக்கு இலக்கம்** :- **8127006345**

**வங்கி** :- **வர்த்தகவங்கி**
**யாழ்ப்பாணம்.**

**நீர்வேலைப்பகுதி,**
**யாழ். மாநகரசபை.**
**யாழ்ப்பாணம்**
**இலங்கை.**

உ

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

01-08-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:-** "பக்திப்பாடல்"

**வழங்குபவர்:-** வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

08-08-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "வாராதிருக்க வழக்குண்டே"

**வழங்குபவர்:-** பண்டிதர் சி வேலாயுதம் அவர்கள்

(இளை. அதிபர்)

---

15-08-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**பாடசாலை மாணவர்கள் நிகழ்வு**

**(ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)**

---

22-08-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம்" (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29-08-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 127ஆவது மாத வெளியீடு

## ஆவணி - 2008

**வெளியீட்டுரை:-** இரா ஸ்ரீநடராசா ஆசிரியர் அவர்கள்

**மதிப்பீட்டுரை:-** திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்

(இளை. பிரதி அதிபர்)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

சுபமங்களம்
நன்றி